Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-23 06-06-2005 திங்கட்கிழமை ஓசை 108

8 JUN 2005




## போராளிகளுக்கான போக்குவரத்து ஒழுங்குகள்

# இராணுவம் தொடர்ந்து இழுத்தடிக்குமானால்

# எமது பாதுகாப்புடன் பயணிக்கவேண்டிவரும்

## போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் கடிதம்

**தமிழர் தாயகத்தில் சிறிலங்காப் படையினர் ஆக்கிரமித்துள்ள பகுதியில் அரசியல் பணிகளில் ஈடுபடுகின்ற போராளிகளுக்கான போக்கு வரத்து ஒழுங்குகளை தொடர்ந்து இராணுவம் மறுத்துவந்தால் ஆக்கிரமிப்புப் பகுதிகளில் நாமே எமது இராணுவப் பாதுகாப்புடன் பயண ஏற்பாடுகளை செய்ய நேரிடும் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.**

இது தொடர்பாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிற்கு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

ஆக்கிரமிப்புப் பகுதியில் அரசியல் பணிகளை மேற்கொண்டு வரும் போராளிகள், தலைமைப் பீடத்தின் ஆலோசனைகளுக்காக சென்று வருவதற்கான போக்கு வரத்து ஒழுங்குகளையும், பாது

(12ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஆனைக்கோட்டையில் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆனைக்கோட்டைப் பகுதியிலுள்ள மூத்த விநாயகர் கோவில் பகுதியில் வைத்து நேற்று நண்பகல் முன்னாள் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். சிவப்பு வெள்ளை நிறத்திலான 'பீல்ட்பைக்' உந்துருளியில் பயணித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.



மற்றோர் உந்துருளியில் பின் தொடர்ந்து வந்தவர்களே இவரை சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகின்றது. முற்பகல் 10.45 மணியளவில் இத் துப்பாக்கிச் சூட்டுச்

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு.அரசியல்துறை அலுவலகம் மீது படையினர் அத்துமீறிச் சோதனை

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு நகர பிரதேச அரசியல்துறை அலுவலகம் நேற்று முன்தினம் நள்ளிரவு பொலிஸ் மற்றும் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு அரடிச சந்தியிலுள்ள இந்த அலுவலகத்தில் நள்ளிரவு 12.00 மணி முதல் 12.30 மணிவரை துணைப்படையினர் சகிதம் சென்ற இராணுவத்தினர் தேடுதல் நடத்த முற்பட்ட போதிலும், அங்கிருந்த விடுதலைப் புலிப்போராளிகள் ஐந்து பேரும் அதற்கு இடமளிக்கவில்லை.

இராணுவத்தினரை தனியாக வந்து சோதனையிட அனுமதிக்க முடியாது. அப்படியானால் கண்காணிப்புக்குழு முன்னிலையில் தான் சோதனையிட முடியும் என்று விடுதலைப்புலிகள் சுட்டிக்காட்டினா.

வெளிநாட்டவர்களுக்கு இங்கு அலுவல் இல்லை. இது எங்கள் நாடு. நாங்கள் தான் சோதனையிட முடியும் என சோதனை நடவடிக்கைக்கு பொறுப்பாக வந்த இராணுவ அதிகாரி கண்காணிப்புக் குழுவினரை அவமதிக்கும் வகையில் வார்த்தைப் பிரயோகம் செய்துள்ளார்.

இதனையடுத்து விடுதலைப்புலிகளுக்கும் அங்கு வந்த இராணுவத்தினருக்குமிடையில் கடுமையான வாய்த்தகராறு ஏற்பட்டது.

இது பற்றி விடுதலைப்புலிகளினால் கண்காணிப்புக் குழுவிற்கும் தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு., கொழும்பில் இரு தினங்களில் நால்வர் துப்பாக்கிச் சூட்டில் பலி

கொழும்பிலும், மட்டக்களப்பிலும் கடந்த இரு தினங்களில் நால்வர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். கொட்டாஞ்சேனையில் நேற்று இருவரும் நேற்று முன்தினம் பஞ்சிகாவத்தையில் ஒருவரும் மட்டு. மாவட்ட எல்லைப் புறமான ரிதிதென்னையில் ஒருவரும் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர்.

### கொட்டாஞ்சேனையில்

கொழும்பு கொட்டாஞ்சேனையில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இரு தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்குளி நோக்கி பேருந்தில் சென்று கொண்டிருந்த சமயம் கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தின் முன்பாக வைத்து இவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். முச்சக்கரவண்டி ஒன்றில் வந்த இனம்தெரியாத இரு இளைஞர்கள் பேருந்து பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் முன்பாக நிறுத்தப்பட்ட போது பேருந்தினுள் ஏறி குறிப்பிட்ட இரு இளைஞர்களையும் சுட்டுக்கொன்றுவிட்டுச் தப்பிச் சென்றுவிட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்த பிரான்சிஸ் டெனிசீயஸ் எனவும், தேவதாசன் இமானுவேல் எனவும் அவர்கள் வைத்திருந்த அடையாள அட்டை மூலம் சிறிலங்கா பொலிசார் உறுதி செய்துள்ளனர். சம்பவ இடத்திற்குச் சென்ற சிறி

(12ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி சிவகுமாரனின் 31ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று அனுஷ்டிப்பு!



(யாழ்ப்பாணம்)

தியாகி சிவகுமாரனின் 31ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று உரும்பிராயில் உள்ள சிவகுமாரனின் நினைவுச் சிலையடியில் கோப்பாய் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ந. சிவகடாட்சரம் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரினை யாழ். மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை தாயார் திருமதி. அன்னலட்சுமி பொன்னுத்துரை ஏற்றிவைத்தார். நினைவுச் சிலைகது சகோதரர் பொன். சிவசுப்பிரமணியம் மலர் மாலையை அணிவித்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அதிபர் ஆ. நடராசா உரையாற்றும்போது, சிங்களப் பேரினவாதிகள் இன்று தமிழ் மக்களுக்கு எந்த வகையான உரிமைகளும் வழங்கக்கூடாது எனப் போராடும் நிலைமை தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ளது. ஆனால், எம்மைப்பொறுத்தவரையில் நாம் இன்னும் விழிப்படையாத நிலைமையிலேயே இருக்கின்றோம் என்பது வேதனையான நிலைமையாகும். இந்த நிலையில் இருந்து விடுபட்டு

(12ஆம பக்கம் பார்க்க)

## உலக சூழல் தினம் வன்னியில் கடைப்பிடிப்பு

உலக சூழல் தினத்தில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று வன்னியில் மேற்கொள்ளப்பட்டது. முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இந்த நாளை ஒட்டிய விழிப்புணர்வு செயற்பாடுகளும், கருத்தமர்வு நிகழ்வும் இடம்பெற்றுள்ளன.கிளிநொச்சியில் நடைபெற்ற சுற்றுச் சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தமர்வு நிகழ்வினை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னெடுத்தது. சூழல் பாதுகாப்புத் தொடர்பான செயற்றிட்டங்களுக்கான பல்வேறு முன் மொழிவுகள் கருத்தமர்வில் முன்வைக்கப்பட்டன.

## சிவராம் படுகொலை தொடர்பாக "புளொட்" சந்தேக நபர் கைது

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை சிறிலங்காப் பொலிசார் கைதுசெய்துள்ளனர். புளொட் அமைப்பின் இராணுவ பிரிவு பொறுப்பாளரான பீற்றர் என்பவரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சிவராமின் படுகொலை நடவடிக்கையில் முக்கிய பங்கினை இவர் கொண்டிருந்ததாகவும்,பொலிசார் தெரிவித்துள்ளனர். இதே வேளை இவரிடம் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் மூலம் மேலும் பல முக்கிய தகவல்கள் வெளியாகும் என பொலிசா நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

(32)

# வரிவிளம்பரம்

## விற்பனைக்குண்டு

முல்லைத்தீவு பிரதான வீதியிலுள்ள மணிச்செட்டியார் புடவை மாளிகை கடை விற்பனைக்குண்டு. இக்கட்டடத்தினைப் பெற விரும்புவோர் முல்லைத்தீவு பிரதான வீதியிலுள்ள மணிச்செட்டியாருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவித்தார். (சி.12035)

## சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

4ஆம் கட்டை, மல்லாவி வீதி, வன்னிவிளான்குளத்தில் இயந்திரத்தால் செய்த சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு.

5" x 6" x 12" - ரூபா 23.00
4" x 6" x 14" - ரூபா 20.00

(6210)

## வீடு விற்பனைக்கு

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு முன் ஒழுங்கையில் உள்ள 2 ஏக்கர் காணியுடன் பெரிய கல்வீடு, கிணறு, மலசலகூட வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்புகட்கு: திருமதி:பூமணி தர்மலிங்கம், 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை.

(6166)


# முல்லைத்தீவில் தொலைபேசி சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினரால் அமைக்கப்பட்ட தொலைபேசி இணைப்புக்கள் கடந்த மூன்றாம் திகதி தொடக்கம் இயங்க ஆரம்பித்துள்ளன.

இதன் மூலம் அரச திணைக்களங்களின் வேலைகள் இலகுவாக்கப்பட்டிருப்பதுடன், புலம் பெயர்ந்து வாழும் தம் உறவுகளுடன் மக்கள் தொடர்பு கொள்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது. (20)

# மன்னாரில் மரக்கறி சந்தை கட்டடத்தொகுதி திறப்பு

(மன்னார்)

மன்னார் நகரத்தில் பல மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மரக்கறிச் சந்தைக்கான கட்டடத்தொகுதி நேற்றுக் காலை 9.00 மணியளவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இம்மரக்கறிச் சந்தை முன்பு தற்காலிகமாக பள்ளிமுனையில் இயங்கியது. தற்சமயம் பிரதேச சபையினரும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தாலும் வியாபாரிகளுக்கென இக்கடைகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன. (18)

# மன்னார் பேராலயத்தின் திவ்விய நற்கருணைப் பெருவிழா

(மன்னார்)

மன்னார் பேராலயத்தின் திவ்விய நற்கருணை எனும் பெருவிழா நேற்று இடம் பெற்றது.

முதலாவது நற்கருணை விழாவின் வழிபாடு ஹட்டன் நஷனல் வங்கிக்கு முன்பாகவுள்ள விசேட பீடத்திலும், இரண்டாவது சந்திப்பு மன்னார் நகரத்திலுள்ள மடுமாதா சிலுவைப்பீடத்திலும், மூன்றாவது சந்திப்பு சிறிலங்கா ரெலிகொம் சந்தியிலுள்ள விசேட பீடத்திலும், நான்காவது சந்திப்பு மாதாகோவில் முன்பாகவுள்ள விசேட பீடத்திலும் இடம் பெற்றது.

இதில் மன்னார் மாவட்டத்திலுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

இவ் விழாவிற்கான சகல ஏற்பாடுகளையும், பங்குத்தந்தையும் அருட்தந்தையுமான எஸ்.எமியானோஸ் பிள்ளை மேற்கொண்டார்.

(18)

# முல்லையில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்திய அதிகாரி பணிமனை கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்ற முல்லை.மாவட்ட சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை எதிர்வரும் 15 ஆம் திகதி வைத்திய அதிகாரி ஜெயகுலராஜாவிடம் கையளிக்கவுள்ளது.

இத் திணைக்களம் ஏற்கனவே போரினாலும், சுனாமியினாலும் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (20)


# சாவு அறிவித்தல்



## அமரர்
## சிதம்பரப்பிள்ளை அருமைநாயகம்

நாகர்கோவில் மேற்கு யாழ்ப்பாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவரும், தற்பொழுது இல-17 ஆனந்தபுரத்தில் வசித்து வந்தவருமான திரு.சிதம்பரப்பிள்ளை அருமைநாயகம் 04.06.2005 சனிக்கிழமை அகால மரணமடைந்தார். அன்னார் தவக்கிளியின் அன்புக்கணவரும், அருள்மாலா (சட்டமாணி கொழும்பு பல்கலைக்கழகம்), அஜந்தமாலா (லண்டன்), சிதம்பரநாயகம் (லண்டன்), கார்த்திகேயன் அருமைகிரி (இரணைப்பாலை றோ.க.மகாவித்தியாலயம்), காலம் சென்ற அருணகிரி ஆகியோரின் அன்புத்தந்தையாரும், காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை, தங்கம்மாவின் அன்புப்புதல்வனும், காலஞ்சென்ற கார்த்திகேசு, பாக்கியம் ஆகியோரின் ஆசை மருமகனும், இராஜேஸ்வரி (லண்டன்), பகவதி அம்மா, சிவனேஸ்வரி (இரணைப்பாலை), சிவநாயகம் (லண்டன்) தில்லைநாதன் (லண்டன்), தங்கநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகமுத்து (லண்டன்), சுந்தரலிங்கம், சந்திரசேகரம் (இரணைப்பாலை), கமலவேணி (லண்டன்), தயா (லண்டன), யோகம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ஞானசேகர் (லண்டன்), சதானந்தன் (லண்டன்), அருமைலிங்கம் (லண்டன்), ஆனந்தன் (அயர்லாந்து), மணிவண்ணன் (பிரான்ஸ்), ரேகுபாலன் (லண்டன்), லதா (இந்தியா), நாகேஸ்வரி (இந்தியா), தங்கேஸ்வரி (கனடா), ஜெகதீஸ்வரி, ஸ்ரீவித்தியா, பாலாமணி, சுபாசினி, சிறிதேவி, நிவேதா, அனிபா, உதயசீலன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரகலா (லண்டன்), தர்சினி (லண்டன்),பிரதீப் (லண்டன்), ஜவாகர் (லண்டன்), ஜக்சன் (லண்டன்), கஸ்னிகா (லண்டன்), ஆகியோரின் பெரியதந்தையாரும், செல்வராணி, செல்வேஸ்வரி, செல்வரஞ்சன், செல்வேந்திரன், செல்வகாந்தன், செல்வமலர், செல்வமதன், செல்வரதி, செல்வசுதன் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 05.06.2005 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணியளவில் மாத்தளன் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(6165)



# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண அரசாங்க அதிபர்/மாவட்ட செயலரினால் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | வேலை விபரம் | ஆகக்குறைந்த தரம் (ICTAD) | மீளளிப்புச் செய்யக் கூடிய வைப்புத் தொகை | மீளளிப்புச் செய்ய முடியாத தொகை |
|---|---|---|---|---|
| 01 | கட்டடம் நிர்மாணித்தல்-மானிப்பாய் ப.நோ.கூ. சங்கம் | M8 | 20000.00 | 750.00 |
| 02 | நீதிமன்ற கட்டடத் தொகுதி அமைத்தல்-மல்லாகம், நீதிமன்றம். | M5 | 120000.00 | 750.00 |
| 03 | சாட்சிக் கூடு, மலசலகூடம் அமைத்தல்-நீதிமன்ற கட்டடத் தொகுதி-மல்லாகம், நீதிமன்றம. | M9 | 10000.00 | 750.00 |
| 04 | சுற்றுமதில்,தண்ணீர் தாங்கி அமைத்தல்-மல்லாகம், நீதிமன்றம். | M8 | 20000.00 | 750.00 |
| 05 | கொற்றாவத்தை அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை-இருமாடிக்கட்டடம் நிர்மாணித்தல். | M8 | 18000.00 | 750.00 |

2. கேள்விதாரர் நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் அல்லது அதற்கு மேல் பதிவு செய்யப்பட்ட இலங்கை கட்டட ஒப்பந்தக்காரர் சங்க அங்கத்தவர்களாகவும் கேள்விதாரர் இருத்தல் வேண்டும்.

3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட்(ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

5. கேள்வி ஆவணத் தொகுதிகளைத் திட்டப் பணிப்பாளர் மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் குறிப்பிட்ட ஒவ்வொரு வேலைக்குமான மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகையினையும், மீளளிப்புச் செய்யமுடியாத தொகையினையும் செலுத்தி 17-06-2005 ஆம்திகதி பிற்பகல் இரண்டு மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

6. கேள்வி ஆவணங்களைத் திட்டப் பணிப்பாளர், மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களில் இலவசமாகப்பார்வையிடலாம்.

7. கேள்விகள் இணைப்பிரதிகளில் அரக்கு முத்திரை பொறிக்கப்பட்ட உறையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒருவர் ஆறு வேலைகளுக்கும் கேள்விகள் சமர்ப்பிக்கலாம். ஒவ்வொரு வேலைக்கும் கேள்விகள் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, யாழ்.மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் 20.06.2005 ஆம்திகதி பிற்பகல் 01.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது திட்டப்பணிப்பாளர் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் 20.06.2005 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

மாவட்ட கேள்விச்சபை,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
03.06.2005

க.கணேஸ்,
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
தலைவர்,
மாவட்டக் கேள்விச்சபை,
யாழ்ப்பாணம்.

(சி.12188)

# 2015ஆம் ஆண்டுக்குள் உலகில் 200 கோடி மக்களுக்கு குடிநீரும் அடிப்படை சுகாதார வசதியும் கிடைப்பது உறுதி



ஈராக்கில் முக்கிய போராளித் தலைவர் அப்துல் முஷாப் அல்சக்காவி மறைந்திருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து ஈராக்கின் தெற்குப் பகுதியில் தேடுதல் நடத்திய அமெரிக்க விசேட படையினர் அப்பகுதி மக்களை ஓரிடத்தில் அமர்த்தி அடையாளங் காணும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

## ஐக்கிய நாடுகள் அமைப்பு அறிவிப்பு

(ஜெனீவா)

**2015 ஆம் ஆண்டுக்குள் உலகில் 200 கோடி மக்களுக்கு சுத்தமான குடிநீரும், அடிப்படை சுகாதார வசதிகளும் கிடைப்பது உறுதி செய்யப்படும் என்று ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது.**

ஜெனீவாவில் வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்தில் ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் மற்றும் உலக சுகாதார நிறுவனம் ஆகியவை இதை உறுதி செய்தன.

உலக சுற்றுச் சூழல் தினம் நேற்று கடைப்பிடிக்கப்பட்டது. இதையொட்டி இந்த இரு அமைப்புக்களும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

பாதுகாப்பான குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிக்கு ஆண்டு தோறும் ரூபா.1,130 கோடி செலவிட வேண்டும்.

இந்த குறைந்த பட்ச நிதி ஒதுக்கீடு மூலம் மனித இறப்புக்கள் மற்றும் நோய் வாய்ப்படுவதை வெகுவாகக் குறைக்க முடியும். மேலும் பொருளாதாரமும் வலுப்படும்.

உலகில் உள்ள ஏழை நாடுகளில் மோசமான குடிநீர் சுகாதார வசதியின்மை ஆகிய காரணங்களால் ஆண்டு தோறும் 19 இலட்சம் குழந்தைகள் இறக்கின்றனர்.

இதில் வாந்தி பேதி போன்ற நோய்களால் மட்டும் ஆண்டு தோறும் மூன்று இலட்சம் குழந்தைகள் இறக்கின்றனர். குறிப்பாக தெற்காசியா மற்றும் ஆபிரிக்காவின் சஹாரா பகுதிகளில் இந்த இறப்பு சம்பவங்கள் அதிகம் நிகழ்கின்றன.

தெற்காசியாவில் ஆண்டு தோறும் கூடுதலாக 4.2 கோடி மக்களுக்கு சுகாதார வசதி அளிப்பதன் மூலம் 2015 இல் இலக்கை எட்ட முடியும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாக்தாத்தில் கிளர்ச்சித் தலைவர் அபுமுசாப் அலசார்கவி ஒளிந்திருப்பதாக கிடைக்கப்பட்ட தகவல்களையடுத்து அங்கு தேடுதலில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப் படையினர்.

# விமானம் கடத்தப்பட்டதாக வதந்தி கனடாவில் கட்டாய தரையிறக்கம்




(வோஷிங்டன்)

தவறான சமிக்ஞை காரணமாக அமெரிக்க விமானம் கடத்தப்பட்டதாக வதந்தி பரவியதால் அந்த விமானம் கனடாவில் கட்டாயமாக தரையிறக்கப்பட்டு முழுமையாக சோதனை நடத்தப்பட்டது. அதன் பின் விமானம் நியூயோர்க்கிற்கு பத்திரமாக வந்து சேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் இருந்து நியூயோர்க் நகருக்கு விர்ஜின் அட்லாண்டிக் நிறுவனத்திற்கு சொந்தமான ஏர்பஸ் விமானம் 273 பயணிகளுடனும், 16 சிப்பந்திகளுடனும் அட்லாண்டிக் பெருங்கடல் மீது பறந்தபோது அந்த விமானம் கடத்தப்படுவதாக கனடாவில் உள்ள தரைக் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு சமிக்ஞை கிடைத்தது.

உடனடியாக உசாரடைந்த அதிகாரிகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தினர். இரண்டு போர் விமானங்களை அனுப்பி விர்ஜின் அட்லாண்டிக் விமானத்தை ஹாலிபாக்ஸ் விமான நிலையத்தில் கட்டாயமாக தரையிறக்கினர். அங்கு நான்கு மணி நேரம் முழுமையாக நடந்த சோதனையில் பயணிகளுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்றும், தவறான முன்னெச்சரிக்கை காரணமாக சம்பவம் நடந்தது என்றும் தெரிவித்தது பின்னர் அங்கிருந்து பத்திரமாக அந்த விமானம் நியூயோர்க் வந்து சேர்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# குற்றங்கள் நிரூபணமானால் ஜாக்சனுக்கு 18 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை



அமெரிக்கப் பொப் இசைப்பாடகர் மைக்கேல் ஜாக்சன் (வயது -46) மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளும் நிருபணமானால் அவருக்கு 18 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அளிக்கப்படுமென சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ள னர்.

சிறுவனை பாலியல் பலாத்காரம் செய்தது, சதித்திட்டம் தீட்டியது உட்பட பத்து குற்றச்சாட்டுகள் குறித்து அவர் மீது விசாரணை நடைபெற்று வருகிறது.

13 வயதுச் சிறுவனை நான்கு முறை பாலியல் பலாத்காரம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்ட சிறுவனின் சகோதரர் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த வழக்கில் மட்டும் சாட்சியம் நிருபணமானால் அவருக்கு மூன்றிலிருந்து எட்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை கிடைக்கும்.

சிறுவனைக் கடத்திச் சென்று வீட்டில் சிறை வைத்து துன்புறுத்தியது.

அவனது குடும்பத்தாரை மிரட்டியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது. மது அருந்திவிட்டு சிறுவனை பலாத்காரம் செய்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டு குறித்தும் விசாரணை நடைபெறுகிறது.

இந்த பத்து வழக்கு[illegible]லும், குற்றங்கள் நிருபணமானால் ஜாக்சனுக்கு 18 ஆண்டுகள் மற்றும் எட்டு மாதங்கள் வரை சிறைத்தண்டனை கிடைக்குமென முன்னாள் அரசு வழக்கறிஞர் லெவன்சன் தெரிவித்துள்ளர்.

# ரோபோக்களின் துணையுடன் இயங்கும் அதிசய நீர் மூழ்கிக் கப்பல் போர் முனையில்

(வோஷிங்டன்)

நவீன போர் விமானங்களையும், ஏவு கணைகளையும் குவித்து வைத்துள்ள அமெரிக்க இராணுவம் இப்போது போர்முனையில் எதிரிகளை உளவு பார்க்க ரோபோக்களைப் பயன்படுத்திவருகிறது. ஆள் இல்லாத விமானங்களில் இந்த ரோபோக்களை அனுப்பி கண்காணிப்பு நடத்துகிறது.

இப்போது ஆழ்கடலுக்கு அடியில் சென்று எதிர் நாட்டு கப்பல்களைத் தகர்க்கவும் குட்டி நீர்மூழ்கி கப்பல்களை அமெரிக்கா தயாரித்து வருகிறது. இந்த நவீன நீர்மூழ்கி கப்பல்கள் ரோபோக்களால் இயக்கப்படுகின்றன. கடலுக்கு அடியில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளை இந்த ரோபோக்கள் நீர்மூழ்கி கப்பல் கண்டு பிடித்து அகற்றும். அத்துடன் எதிரிகளின் நீர்மூழ்கி கப்பல்களை நீண்ட தூரத்தில் இருந்தே கண்டுபிடித்து அவற்றை தகர்த்து விடும்.

ஆனால் இந்த குட்டி நீர் மூழ்கி கப்பல்களை எதிரி நாட்டு கப்பல்களால் அடையாளம் காண முடியாது. 21 அங்குலம் அகலம் மட்டுமே இருக்கும். இது போன்ற நான்கு நவீன நீர் மூழ்கி கப்பல்கள் முதற்கட்ட மாகத் தயாரிக்கப்பட்டுள்ளன.

# விபச்சாரத்துக்காக பெண்களைக் கடத்தும் 14 நாடுகளுக்கு பொருளாதார தடை

விபசாரத்துக்காக வெளிநாடுகளுக்கு பெண்களைக் கடத்தும் 14 நாடுகளுக்கு பொருளாதார தடை விதிக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது. இந்த நவீன காலத்திலும் பல நாடுகளில்இருந்து வெளிநாடுகளுக்கு மனிதர்கள் கடத்தப்படுவதை தடுக்க முடிவதில்லை. பெரும்பாலும், விபச்சாரம் மற்றும் கொத்தடிமை வேலைகளுக்காக பலர் நாடுவிட்டு நாடு கடத்தப்பட்டு வருகின்றார்கள்.

இப்படி கடத்தப்படுகிறவர்களை 'நவீன கால அடிமைகள் என்று அமெரிக்கா வர்ணித்துள்ளது. சவுதி அரேபியா, குவைத் உட்பட 14 நாடுகள் இத்தகைய ஆட்கடத்தலை தடுக்க உறுதியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று அமெரிக்கா வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்த நாடுகளுக்கு பொருளாதாரத் தடை விதிக்க அமெரிக்கா முடிவு செய்திருப்பதாக வெளியுறவுத்துறை அமைச்சர் கொண்டலீசாரைஸ் நேற்று முன்தினம் அறிவித்தார். இந்த நாடுகளின் பட்டியலில் சவுதி அரேபியா, குவைத் தவிர கட்டார் ,ஐக்கிய அரபு குடியரசு போன்ற மேலும் சில வளைகுடா நாடுகளும் இடம்பெற்றுள்ளன. அந்த நாடுகளுக்கு தண்டனை அளிப்பது இதன் நோக்கமல்ல. நவீன அடிமைத்தனத்தை ஒழிக்க அவர்கள் உறுதியான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகவே இந்த தடை விதிக்கப்படுகிறது என்றார்.

### பலஸ்தீன தேர்தல் நடைபெறுவதில் தாமதம்

பலஸ்தீனப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதில் தாமதம் ஏற்படும் என்று சனாதிபதி மஹ்முத் அப்பாஸ் தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு தீவிரவாதிகளை ஆத்திரத்திற்குள்ளாக்கியுள்ளது. பலஸ்தீனத்தீல் முதலாவது சட்டசபைத் தேர்தலில் ஹமாஸ் இயக்கத்தினர் வெற்றிபெறும் வாய்ப்புக்கள் இருப்பதாகத் தெரியவருகிறது.

### அவுஸ்திரேலியக் கைதி உயிருடன் உள்ளாராம்

ஈராக்கில் கடந்த ஐந்து வார காலமாக பணயக்கைதியாக வைக்கப்பட்டிருக்கும் அவுஸ்ரேலியர் ஒருவர் உயிருடன் இருப்பதாக தெரிய வருகின்றது. அந்தக்கைதியை விடுதலை செய்யும் பொருட்டு முயற்சி எடுத்து வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.



பாக்தாத் ஆமெல் மாவட்டத்தில் கார்க்குண்டுத் தாக்குதலிலும், துப்பாக்கிச் சண்டையிலும், சேதமடைந்த வாகனச் சிதைவுகளையும், இறந்த உடல் ஒன்றையும் ஈராக்கியப பொலிசார் ஒருவர் பார்வையிடுகின்றார்.

# கலாச்சார சீரழிவுகள் உடன் நிறுத்தப்படவேண்டும்; மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர்!

## —மன்னார் தமிழர் கலாச்சாரம் பேணும் அமைப்பு எச்சரிக்கை

(மன்னார்)

**எமது பிரதேசங்களில் இடம்பெறும் கலாச்சார சீரழிவுகள் உடன் நிறுத்தப் படவேண்டும். மீறுவோர் கடுமையாக தண்டிக்கப்படுவார்கள் இதற்கு துணைபோகும் எந்த சக்திகளுக்கும் சாவுமணி அடிக்க நாம் புறப்பட்டு விட்டோம். இனியும் எமது மண்ணை அபகரிக்க நினைப்போர், எமது மண்ணில் கலாச்சார சீரழிவுகளை மேற்கொள்வோர் திருந்துவதற்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மீறினால் விளைவுகள் விபரீதமாகுமென மன்னார் மாவட்ட தமிழர் கலாச்சாரம் பேணும் அமைப்பு எச்சரித்துள்ளது.**

"எச்சரிக்கை" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில்மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

கடந்த காலங்களில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் பேரினவாத சக்திகளால் மதத்தின் பெயரில் புத்தர் சிலைகளை அமைத்து எமது தாயகப் பிரதேசத்தை சிங்கள மயமாக்க மேற்கொண்டுவரும் கபடத்தனமான நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மேலும் தாயகத் தலைநகரான திருகோணமலையில் தொடங்கி ஓமந்தையிலும் புத்தர்சிலை வைக்கப்பட்டமை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாததொன்றாகும். காவியுடைக்குள் அரசியல் செய்து கொண்டு புத்த தருமத்தை குழி தோண்டிப் புதைத்து புத்தபெருமானின் துறவற வாழ்க்கைக்கே களங்கத்தை உண்டுபண்ணும் இத்துரோகிகள் இன்று புத்தரின் பெயரால் எமது தாயக மண்ணைக் கூறுபோட நினைப்பதை நாம் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம்.

எனவேதான், மன்னார் சாந்திபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த பௌத்த விகாரை எம்மால் சேதமாக்கப்பட்டது. இங்கு விகாரைக்கு அருகாமையில் சிங்களவரை குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை யாவரும் அறிந்ததே. எனவேதான். இதனை தடுப்பதற்கான ஒரு எச்சரிக்கையே இவ்விடயமாகும்.

இனிமேலும் இவ்வாறான தாயகப் பிரதேசங்களைச் சூறையாட நினைப்பவர்களுக்கு கடுமையான எச்சரிக்கை செய்கின்றோம் எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிற்போடல்

நாளை ஏழாம் திகதி நடைபெறவிருந்த கிளிநொச்சி மாவட்ட கல்வி, சுகாதாரக் குழுக் கூட்டங்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்றும், நடைபெறவிருக்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கிளி.மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.

# கரும்புலிகள் நினைவுத்தூபி அடிக்கல் நாட்டு வைபவம்

(பரந்தன்)

பரந்தன் குமரபுரம் கிராமத்தில் கரும்புலிகள் நினைவுத்தூபிக்கான அடிக்கல் நாட்டு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் நாகேந்திரம் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்நிகழ்வின் பொதுச்சுடரினை மாவீரன் ரெஜினோல்ட்டின் தந்தை இராமசாமி மற்றும் ந.மகேந்திரம் ஆகியோர் ஏற்றிவைத்தனர். அடுத்து கிளிநொச்சி கல்விவலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் க.ம. பத்மநாதன், விளையாட்டு உத்தியோகத்தர் ப.ஆனந்தராஜா, மருந்தக உரிமையாளர் கண்ணன் ஆகியோர் கரும்புலிகளின் நினைவுத்தூபிக்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தனர்.

# தியாகி திலீபன் மருத்துவமனை கதிரவெளியில் திறந்துவைப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேச வாகரையில் உள்ள கதிரவெளியில் திலீபன் மருத்துவமனை நேற்று முன்தினம் மாலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த மருத்துவமனை தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட துணை அரசியல்துறைப்பொறுப்பாளர் செம்மணன், மருத்துவப்பிரிவின் பொறுப்பாளர் வைத்தியகலாநிதி தில்லை உட்பட பலர் கலந்துகொண்டனர். இந்த மருத்துவமனை திறக்கப்பட்டதை அடுத்து மருத்துவ வசதி அற்ற வாகரைப் பிரதேச 16 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பெரிதும் நன்மை அடையவுள்ளனர்.



பல வருட காலமாக புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாது பாரிய சேதத்திற்குள்ளாகி மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலையிலுள்ள உருத்திரபுரம் இரத்தினம் பண்ணை வீதிப் பாலத்தினையும் அதனை அண்மித்து சேதமடைந்த வீதியினை தென்னை மரக் குற்றிகளைப் பயன்படுத்தி பலத்த சிரமங்களுக்கு மத்தியில் மக்கள் பாவனைக்கு உட்படுத்தி வருவதனைப் படத்தில் காணலாம். மேற்படி பாலமானது இருபது வருடங்களுக்கு மேலாக புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளபடாதுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்:- சோதி)

# தூயவன் அரசறிவியல் கல்லூரியில் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி

(அலுவலக செய்தியாளர்)

தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி நேற்று முன்தினம் கிளிநொச்சியில் அமைந்துள்ள தூயவன் அரசறிவியற்கல்லூரியில் சிறப்புற நடைபெற்றுள்ளது.

காலை 8.40 மணிக்கு தூயவன் அரசறிவியற் கல்லூரியைச் சேர்ந்த புலிமறவன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்டத் தளபதி ஜெனார்த்தனன் ஏற்றி வைத்தார். மங்கல விளக்கினை தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்தஉறுப்பினர் க.வே. பாலகுமாரன், ஓவியர் புகழேந்தி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து ஓவியக் கண்காட்சி மண்டபத்தை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். மேற்படி ஓவியக் கண்காட்சியில் இருபத்தெட்டுக்கும் அதிகமான ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான போராளிகள், தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப்பரராஜசிங்கம் ,பொதுமக்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். இக்கண்காட்சி நிகழ்வு மாலை 5.30 மணியுடன் நிறைவு பெற்றது. (லோ,தீ)

# மூதூர் சந்தன வெட்டையில் புதிய பாடசாலை ஆரம்பம்

(திருமலை)

மூதூர் சந்தனவெட்டைப்பகுதியில் புதிய பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஐங்கரன் மகாவித்தியாலயம் என்ற இந்தப் பாடசாலை இப்பிரதேச மாணவர்களின் கல்விக்குப் பெரும் உதவியாக அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக ஐந்து கிலோமீற்றர் தொலைவைத்தாண்டியே இப்பகுதி மாணவர்கள் கல்விக்காக செல்லவேண்டிய நிலைமாற்றப்பட்டு தற்போது இப்பிரதேசங்களிலேயே கற்கும் நிலை ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பால்மா பைக்கற்றுக்கள் வழங்கல்

(நமது செய்தியாளர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வழங்குவதற்காக சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான பால்மா பைக்கற்றுக்களை மலிபன் பிஸ்கட் கொம்பனி நிறுவனத்தார் கிளி. மாவட்ட அரசாங்க அதிபரிடம் வழங்கியுள்ளனர்.



கடந்த மாதம் 31ஆம் திகதி அரச அதிபர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்ட இப் பால்மா பைக்கற்றுக்கள் ஒவ்வொன்றும் 400 கிராம் அளவுடையவை, இதில் 24 பைக்கற்றுகள் அடங்கிய 300 பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. வடகிழக்கு பிராந்திய மலிபன் கொம்பனி முகாமையாளர் ஆர்.சசீந்திரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மலிபன் உற்பத்திப் பொருள் விற்பனைப்பிரதிநிதி அ.அன்ருசீலன் ஆகியோர் இப்பால்மா பைக்கற்றுக்கள் அடங்கிய பொதிகளை கிளி.அரச அதிபரிடம் வழங்கினர்.

# உவர்மலையில் கன்ரர் வாகனம் இனந்தெரியாதோரால் எரிப்பு!

(திருமலை)

திருகோணமலை உவர்மலைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று கன்ரர் ரக வாகனம் ஒன்று இனம் தெரியாதவர்களினால் எரிக்கப்பட்டுள்ளது.



திருகோணமலை மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த முருகையா ஆனந்தன் என்ற மரக்கறி வியாபாரியின் வாகனமே எரிக்கப்பட்டது.

இவர் படையின ... மரக்கறி விநியோ... செய்பவர் என்று ... றது.

# கிராம அபிவிருத்தி கலந்துரையாடல்

கெயார் நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லை.பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் முறிபபு, பூதன்வயல், ஆறுமுகத்தான்குளம் ஆகிய கிராமங்களின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை மு.பொ.அ.நிறுவன இணைப்பாளர் சுரேஸ் தலைமையில் நடைபெற்றது. (20)

# வீதியைப் புனரமைக்க வலியுறுத்து

(முல்லை)

அளம்பில் குமுழமுனை வீதி கடும் பாதிப்புக்குள்ளாயிருப்பதால் அவ்வீதியூடாகப் பயணிக்கும் வாகனங்கள் முதல் பாதசாரிகள் வரை பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றன.

பலரிடம் இது விடயமாக இப்பகுதி மக்கள் தொடர்பு கொண்டு மகஜர்கள் வழங்கியபோதும் இதுவரை வீதிக்கு அருகில் உள்ள பற்றைகள் கூட அகற்றாத நிலையில் போக்குவரத்தில் சிரமம் எதிர்கொள்ளப்படுகின்றது.

இந்த வீதிதிருத்தப்படுமா தாம் நிம்மதியாகப் பயணிக்க முடியுமா என மக்கள் அங்கலாய்க்கின்றனர். (20)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# சூழலைப் பேண விழிப்புணர்வு அவசியம்

## தமிழீழ வனவளபாதுகாப்புப் பிரிவின் உலக சூழல் தின சிறப்புச்செய்தி

இன்றைய நவீனத்துவ யுகத்தில் சூழல் தொடர்பான பிரச்சினை களே அதிகளவில் அதிகரித்துக் காணப்படுவதை அறிவியல் செய்திகள் மூலமும், ஊடகங்கள் ஊடாகவும் நேர் ம. றையாகவும் அறியக் கூடியதாக உள்ளது. இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கத்துடன் பன்னாட்டு சமூகம் பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றமையும் குறிப்பிடத் தக்கதாகும். ஆயினும் சூழல் தொடர்பான பிரச்சினைகள் மேலெழுந்து செல்கின்றனவேயன்றி குறைந்தோ அல்லது தீர்வோ கிடைக்கப்படவில்லை என்றே கொள்ளுதல் பொருத்தமாகும்.

இந்த நிலையிலே எந்தச்சூழல் பற்றி எடுத்துக் கொள்வதாயினும், பௌதீகச்சூழலாக இருக்கலாம் சுற்றுச்சூழலாக இருக்கலாம் அல்லது அரசியல் சூழல் சமாதானச்சூழல், அனர்த்தச்சூழல் என்பதாக இருக்கலாம். எந்தச் சூழலிலே பிரச்சினைகள் இல்லை. சூழலுக்குப் பிரச்சினை ஏற்படுகிறது எப்படி? யாரால் ஏற்படுத்தப்படுகிறது? என்பதெல்லாம் இன்று அனைவரின் மத்தியிலும் எழுகின்ற கேள்வி. மறுபுறமாக பார்ப்போமானால் கேள்வி எழுகின்ற நிலையில் அனைவரும் உந்தப் பட்டுள்ளார்கள் அல்லது உணர்ந்துள்ளார்கள். எனின் சூழல் தொடர்பாக விழிப்புணர்வைப் பெற்றுவிட்டார்கள் என்றும் அர்த்தப்படுமல்லவா? ஆகவே எவ்விடயத்திலும் சூழல் கனிந்து அமைந்தாலே அது நிறைவு பெறும் என்பது மட்டும் திண்ணம்.

இதற்காகவே ''சூழலின் சாதகமே சுதந்திரத்தின் முதற்படி" என்று பேரறிஞர் கிரிஸ்டி மார்க்கிறட் கூறியுள்ளார்.

* மட்டுப்படுத்தப்பட்ட வளங்களை கிடைப்பனவுக்கு மிஞ்சிய வகையில் நுகரும்போது சூழல் பிரச்சினை முளைகொள்கின்றது. இது பௌதீக சூத்திரம்.

* அதிகார வர்க்கம் அடிமைத்தனத்தை ஓர் இனம் மீது திணிக்கும்போதும் அதனை எதிர் கொள்ள அவ்வினம் தயாராகும் போதும் சூழல் பிரச்சினை எழுகின்றது. இது போரியல் சூத்திரம்

* விவேகத்தன்மையும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கும், அகிம்சை வழி அணுகு முறையும் கூட சூழல் பிரச்சினையை தோற்றுவிக்கும் இது சமதர்ம சூத்திரம்

* இயற்கையின் சீற்றம் என்றிடும் போதும் சூழல் பிரச்சினை ஏற்படுகின்றது. இது அனர்த்தச் சூத்திரம்

* அபிவிருத்தித்தாக்கத்தின் அடுத்த முனையில் இருந்து சூழல் பிரச்சினை எழுகின்றது இது சுற்றாடல் சூத்திரம்

இப்படியாகச் சூழல் பிரச்சினை என்பது எதிலும் எப்போதும் ஏற்படக் கூடியவை என்பதை நாம் மறந்து விடக் கூடாது என்பதற்காகவே சூழல் தினம் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது. இப்படியாக முளைகொள்ளும் சூழல் தொடர்பான பிரச்சினைகளுக்கு நாமும், எமது சமூகமும், எமது தேசமும் விதிவிலக்கல்ல. எனவே சூழல் தொடர்பாக நாம் விழிப்புடன் இருத்தல் அவசியமானதாகும்.

இந்த வகையிலே தமிழீழ வனவளபாதுகாப்புப் பிரிவினர் ஆகிய நாம் எமது வனச்சூழல் உயிரியல் சூழல் பற்றி ஆராய்தல் இந்நாளிலும் எந்நாளிலும் பொருத்தமானதாக அமையும் என்பதால்.........

மனிதன் உயிர் வாழும் ஒரு கிரகமாக பூமியுள்ளது. பூமிப்பந்தின் கவசமாகக் காடுகள் அமைந்துள்ளன. இன்று மனித நாகரிகத்தின் எல்லையில்லாத வளர்ச்சியின் காரணமாக அபிவிருத்தி என்ற மாயையால் கவசமாக அமைந்த காடுகளில் 75வீதமானவை அழிக்கப்பட்டுவிட்டன. மீதமானவையும் அழிவுக்கு உட்படுத்தப் பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு தேசம் 36 வீதமான காடுகளினால் பராமரிக்கப்படுதல் வேண்டும் என்பது உலக வனவியல் தத்துவமாக உள்ளது.

ஆனாலும் மனிதனின் முன்மாதிரியான அழிவுப்பாதைக்குரிய சமிக்ஞைகளை ஆய்ந்து அறிந்து கொண்ட இந்திய வனத்துறை ஆய்வாளர் திரு. ஏ. எப். மஸ்கரன்காஸ் இப்படிக் கூறுகின்றார்.

"வனங்களின் அழிவு

மனிதனின் பேராசையை வெட்ட வெளிச்சமாக்குவதோடு பூமியை வாழ்வதற்கு தகுதி குறைந்ததாகவும் ஆக்கிவிட்டது'

வனத்துறை ஆய்வாளரின் கூற்றும் சமகால இயற்கை அனர்த்தங்களின் தன்மையும் மிகவும் பொருத்தப்பாடாக அமைந்துள்ளமை என்பது இக்கூற்று அனைவராலும் ஆமோதிக்கப்பட்டதொன்றாக ஆரூடம் கூறிக்கொள்வதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த வகையிலே எமது தேசமும் விதிவிலக்கல்ல இன்றே எமது தேசவளப்பண்பாடுகளை நாம் வரையறுக்காது விடுவோமானால் எதிர்காலத்தில் அதிக விலை கொடுத்து இத்தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் என்பதே யதார்த்தமாகும். ஆயினும் அபிவிருத்தி எனும் தாகத்தில் முழ்கியிருக்கும் எம்மீது மூன்றாம் உலக நாடுகளால் வலிந்து தம் பாணியில் திணிக்கப்படும சில செயற்றிட்டங்கள் மூலம் பேணத்தகு அபிவிருத்திஅல்லது நிலையான மேம்பாடு என்பவற்றில் எதிர்கால பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவாறான சில நடவடிக்கைகளும் புகுத்தப்படுகின்றன. இவற்றையும் நாம் இனங்காணுதல் வேண்டும். சுற்றுச்சூழல் தொடர்பாக நாம் எப்பொழுதும் மிகவும் விழிப்புடன் செயற்படுதலே நன்றாகும்.ஏனெனில் இயற்கையோடு இணைந்தும், சுற்றுச் சூழலை அனுசரித்தும் பாரம்பரியமான பழக்கவழக்கங்களைக் கொண்ட எம் இனமும் அவற்றை விட்டு விலகிச் செல்வது கண்கூடாகத் தெரிகின்றது.அதன் தார்ப்பரியம் இன்றல்ல மலரப்போகும் எமது தேசத்திற்கும், எதிர்காலச் சந்ததிக்கும் பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

போரியல் உச்சக்கட்டத்தை எட்டியிருந்த கடந்த காலப் பகுதியான 1992 இல் இருந்து சுற்றுச்சூழல் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் முழுமையான கவன ஈர்ப்பையும், பூரணத்துவமான ஈடுபாட்டையும் கொண்டிருக்கத் தவறவில்லை என்பது யதார்த்தம் இதற்கு சான்று பகர்வதென்பது குறித்த காலப் பகுதியிலே தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இயற்கை வளப் பாதுகாப்புப் பிரிவுகளான தமிழீழ வனவளப்பாதுகாப்புப் பிரிவு, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் குறிப்பிடத்தக்கவையாகும். இது தவிர ஒரு தேசத்தின் தேவைக்கான அனைத்துக்கட்டமைப்புகளும் அக்காலப்பகுதியிலே உருவாக்கப் பட்டதென்பது துணைத்துறைகளின் ஊடான ஒருங்கிணைந்த கொள்கைத்திட்டத்தினை உறுதிப்படுத்துகின்றது.

எனவே எமது தேசத்தில் இறுக்கமான கட்டமைப்பும், துல்லியமான திட்டமிடலும், உறுதியான வழிகாட்டலும் உள்ள வகையில் இயற்கைச் சூழல், சுற்றுச்சூழல், அரசியற்சூழல், சமாதானச்சூழல் என்பவற்றை தேசம் மாசுபடாதவாறு எதிர்கொண்டு வெற்றியடையும் வாய்ப்பும் உள்ளது.

இந்த வகையிலே தமிழீழ வனவளபாதுகாப்புப் பிரிவு ரீதியாக மேலெழுந்த வாரியாக நோக்குவோமானால் தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவு 1993 இல் ஆரம்பிக்கப்பட்டு இழந்த வனங்களை ஈடுசெய்தல், எஞ்சிய வனங்களைப் பாதுகாத்தல் என்பனவற்றுடன் வனவிளை பொருட்களை விநியோகித்தல் போன்ற செயற்றிட்டங்களைப் அமுல்படுத்தி தமிழீழதேசத்தின் வனவளத்தினைப் பாதுகாத்து வருகின்றது.ஆனாலும் கடந்த மூன்று தசாப்தங்களின் முன்பு சிறிலங்கா அரசினால் சுரண்டப்பட்ட எமது வனவளத்தின் வீதத்தினை ஈடுசெய்வதென்பது இலகுவான காரியமல்ல.

1981 இல் 36 வீதமாக இருந்த எமது வனவளம் 1985 இல் 24 வீதமாக சுருங்கியுள்ளது .குறித்த நான்கு ஆண்டுகளின் இடைவெளியில் சிறிலங்கா அரசினால் காடுகள் அழிக்கப் பட்டமை அல்லது சுரண்டப் பட்டவை 12வீத மாக காணப் பட்டது.ஆக தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவின் வனப்பேணல் கட்டமைப்புக்குப் பின்னர் 1992 இல் இருந்து இன்றுவரை 11 ஆண்டுகளில் நுகரப்பட்டவனங்கள் 5.5 வீதமாகவே காணப்படுகின்றன. இதில் 2.5 வீதம் மட்டுமே எமது தேச நுகர்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டவையாகும் ஏனைய மூன்றுவீதமான வனங்களும் இராணுவ அனர்த்தங்களால் அழிக்கப்பட்டவையேயாகும். இதில் இருந்து இப்பிரிவின் வளப்பங்கீட்டுப் பயன்பாட்டின் வரையறையையும், வனவளம் பேணல் செயற்பாட்டின் உண்மைத் தன்மையையும் பிரதிபலித்துக் காட்டுகின்றது.

இதேபோன்று தமிழர் தாயகத்தின் ஏனைய இயற்கை வளச் சுரண்டல்களிலும் சிறிலங்காஅரசு ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் ஏனைய தொடர்புடைய துறைகளிடம உள்ளன. இனி எமது தேசத்தின் புறச்சூழல் பிரச்சினையை எடுத்து நோக்குவோமானால் இன்றைய சமாதான காலச்சூழலில் எமது பகுதிக்குள் வருகை தரும் வலிந்துதவும் நிறுவனங்கள் தாயக பூமியின் புறச்சூழலுக்கு மாசுபிறப்பிக்கக்கூடியதான அபிவிருத்திப்பணிகள் என்னும் பதத்தில் மிக இலகுவாகவும்: சாமர்த்தியமாகவும; தனது கைங்கரியங்களை நல்லெண்ண சமிக்ஞைகள் மூலம் மேற்கொள்ளக் கூடிய சந்தர்ப்பமும் உள்ளது. எனவே கடந்தகால செயற்பாடுகளை கற்றபாடமாக வைத்து சமகால செயற்றிட்டங்களை பேணத்தகு அபிவிருத்தித் திட்டங்களாக மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஒவ்வொரு அமைப்புசார் துறைகளும் கூர்ந்து கவனித்து மிகவும துல்லியமாகத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தத் தயாராக வேண்டும்.

# குடாநாட்டில் இரண்டுவயதுக் குழந்தை உட்பட மூன்று எயிட்ஸ் நோயாளிகள் இனங்காணல்!

(நல்லூர்)

எயிட்ஸ் நோயாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலைமை யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது. இந்நிலைக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டவர்களின் வருகைதரு வோரின் தொகை அதிகரித்துக் காணபபடுகின்றமையும் ஒருகாரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் மூன்று எயிட்ஸ் நோயாளர்கள் இனம் காணப் பட்டுள்ளார்கள்.இதில் இரண்டு வயதுக் குழந்தையும் ஏதும் அறியாத நிலையில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏற்கனவே இருந்த நோயாளர்களுடன் தற்போது இனம்காணப்பட்ட மூன்று நோயாளர்களையும் உள்ளடக்கி 34 நோயாளர்கள் இனம்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.

இனம்காணப்பட்ட நோயாளர்களில் ஒருபகுதியினர் இறந்துள்ளமையும் சுட்டிக்காட்ட வேண்டியதாகும். (41)

# கல்வியை இடைநிறுத்திய சிறார்களை மீள கற்பித்தலில் இணைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் வறுமை காரணமாக தம்பாடசாலைக்கல்வியை இடைநிறுத்திய சிறார்களை மீள கல்விச் செயற்பாடுகளில்இணைக்கும் நடவடிக்கைகளில் சர்வதேச சிறுவர் பாதுகாப்பு கல்வி ஆய்வுநிறுவனம் ஈடுபட்டு வருகின்றது.

இதனடிப்படையில் யாழ். நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் வறுமை காரணமாக தம் கல்வியை இடைநிறுத்திய மாணவர்கள் 16 பேர் மீண்டும் பாடசாலைக்கல்வியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தேவையான சீருடைகள் பாதணிகள், பாடப்புத்தகங்கள்,எழுதுகருவிகள் உட்பட இவர்களுக்கான கல்விச் செலவுகள் அனைத்தையும் இச் சர்வதேச சிறுவர்பாதுகாப்பு கல்விஆய்வு நிறுவனத்தினரே வழங்கி வருகின்றனர் என நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி தெய்வேந்திரம் தெரிவித்தார். (33)

# யாழ்.காக்கைதீவில் மிதிவெடிகளால் மீள்குடியமர்வுப் பணிகள் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்.காக்கைதீவுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் காணப்படும் மிதிவெடி அபாயத்தால் அப்பகுதியில் மீளக்குடியமர்த்தும் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருப்பதாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

மேற்படி பகுதி இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்தவேளை அங்கு இராணுவத்தினரால் ஏராளமான மிதிவெடிகள் புதைத்துவைக்கப்பட்டிருந்தன. தற்போது இப்பகுதியைப் படையினர் மக்கள் பாவனைக்காக விடுவித்துள்ளபோதும் இப்பகுதியில் இருக்கும் மிதிவெடிகள் அகற்றப்படவில்லை.

இதனால் அங்கிருந்து இராணுவ ஆக்கிரமிப்புக்கள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்த முடியாதிருப்பதாக சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (33)

# நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர் யாழ்.போதனா வைத்தியசாலைக்குத்தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலைக்கென விசேட நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்கள் எவரும் நியமிக்கப்படாததால் யாழ்.போதனா வைத்தியசாலையின் நரம்பியல் சத்திர சிகிச்சைச் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன

யாழ்.குடாநாட்டில் விபத்துகளால் ஏற்படும் நரம்பியல் மண்டலப் பாதிப்புகளும்,நரம்பியல்சார் நோய்களும் அதிகரித்து வருவதனால் யாழ்.போதனாவைத்தியசாலைக்கென விசேட நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

எனினும் யாழ். போதனாவைத்தியசாலைக்கென இதுவரையில் விசேட நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை எனச் சுட்டிக்காட்டும் யாழ்.போதனாவைத்தியசாலை நிர்வாக அதிகாரிகள். யாழ்போதனா வைத்தியசாலையில் நரம்பியல் மண்டலப் பாதிப்புகளுக்குள்ளாகி அனுமதிக்கப்படுவோரை விசேட நரம்பியல் மண்டலவைத்திய சேவைக்காக கொழும்பு தேசியவைத்தியசாலைக்கு அனுப்பவேண்டிய நிலை உள்ளதாகவும் இதனால் நோயாளர்கள் பெரும் பாதிப்புகளுக்குள்ளாகுவதாகவும் தெரிவிக்கின்றனர். (33)

# சிறிலங்கா அரசியலில் பொதுக்கட்டமைப்பு ஒரு பொறி!

சிறிலங்காவிலும், இந்தியாவிலும் இருந்து வெளியாகும் ஊடகங்களின் செய்திகள் சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இந்தியத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுக்களுக்கே முக்கியத்துவமளித்துள்ளன.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி யினரின் விரோத மனப்பான்மையை இந்தியத் தலைவர்களூடாக தணித்துக்கொள்ளும் நோக்கமாகவே அவர் அங்கு சென்றுள்ளமை சந்தேகத்திற்கிடமில்லை. இந்தியா பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக தாம் எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கப்போவதில்லை என ஏற்கனவே அறிவித்துள்ள போதிலும் இந்தியத் தலைவர்களிடமிருந்து பகிரங்கமான அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை.

எவ்வாறாயினும் சந்திரிகா நாடு திரும்பியதும் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார். காரணம் இந்த விடயம் நீண்ட நாட்களாக இழுபறிப்படுவதாகும். ஆகவே சந்திரிகாவின் இந்திய விஜயம் பலராலும் உற்று நோக்கப்பட்டுள்ளது. அவர் இது தொடர்பாக என்ன கூறுவார் எப்போது கையெழுத்திடுவார் என பல எதிர்ப்புகள் காத்திருக்கின்றன.

ஆகவே அடுத்து வரும் வாரங்களில் சிறிலங்கா அரசியலில் குறிப்பிடத்தக்க நாடகம் ஒன்று அரங்கேறக் காத்திருக்கின்றது. இந்த நாடக மேடையின் திரை அகலும்போது பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக ஜே.வி.பி.யின் நிலை என்னவாக இருக்கும் என்பது பற்றி அறிய மக்கள் அனைத்துக் கவனத்தையும் அவர்கள் மீது செலுத்துவர். இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டால் அவர்கள் கூட்டரசில் இருந்து நீங்கி விடுவார்களா? அல்லது கூட்டரசிலேயே இணைந்திருப்பார்களா என்ற கேள்விகளும் எழும்.

ஜே.வி.பி அரசிலிருந்து நீங்கிவிட்டால் வேறு வழியின்றி சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தலை அறிவிக்கலாம். ஆனால் இந்த விடயத்தில் ஜே.வி.பி எடுக்கும் முடிவே அதன் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

ஆனால் பொதுக்கட்டமைப்புக் கைச்சாத்திடப்பட்டால் அடுத்த நிமிடமே அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமது அனைத்துத் தரப்பினரும் இராஜினாமாச் செய்துவிட்டு எதிர்க்கட்சி ஆசனத்தில் அமரப் போவது என ஜே.வி.பி.யினர் தமது உயர் மட்டக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்துள்ளனர். எனினும் இந்தக் கூட்டத்திற்கு சோமவன்ச அமரசிங்க வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலைப்பாட்டை தவிர்ப்பதற்காக சனாதிபதிக்கு மிகநெருக்கமானவர்கள் சிலர் ஐ.ம.சு கூட்டணி பிளவுபடுவதைத் தவிர்க்கவும் ஐ.தே.கட்சி கூடைக்குள் இந்தப் பொதுக்கட்டமைப்புப் பந்தை எவ்வாறு போட்டுவிடுவது என்பது பற்றியும் தீர ஆலோசித்து வருகின்றனர்.

ஐ.தே. கட்சியும், பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதாகக் காணப்படுவதும் நோக்கத்தக்கது. எனினும் அரசாங்கம் ஐ.தே.கட்சி முன்வைத்த சமாதானத்திட்டம பற்றி அவர்களிடமே எடுத்துக் கூறி அவர்களையும் இதில் இணங்கவைத்து அதன் மூலம் ஜே.வி.பி.யையும் இணங்கவைக்க பெரும் இராஜதந்திரப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. பல அரசியல் தலைவர்கள் ஒரே பாதையில் காலடி வைக்க ஐ.தே.க வினர் இது தொடர்பாகப் பல ஆர்ப்பாட்டக் கூட்டங்களை அடுத்தடுத்த வாரங்களில் நடத்துவதென தீர்மானித்துள்ளனர். ஐ.தே. கட்சி அரசியல்வாதிகள் திங்கட்கிழமை (இன்று) காலைகூட தீர்மானித்திருக்கும். அதேவேளை ஐ.தே.கட்சி பாராளு மன்றக்குழு திங்கட்கிழமை (இன்று) மாலை சந்தித்துத் தீர்மானிக்க விருக்கின்றது. அத்துடன் ஐ.தே. கட்சியின் உழைக்கும் வர்க்கத்தினர் செவ்வாய்க்கிழமை (நாளை) கூடி ஆராயவிருக்கின்றனர். இந்த நிலையில் பிரதான எதிர்க்கட்சியின் தீர்மானமும், அதிக வாக்குகளைப் பெற்ற தனிக்கட்சியின் தீர்மானமும் எவ்வாறு இருக்கும் என்பதை அறிவதில் அதிக ஆர்வம் இருக்கும்.



ஜே.வி.பி.யினதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் பாதைகள் பிரிந்து செல்லும் நிலையை அண்மிக்கும் வேளை சில சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அனுர பிரியதர்சன யாப்பாவின் தலைமையில் இதனைத் தவிர்த்துமீண்டும் ஒட்டிவிடும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். இந்தக் குழுவினர் கடந்தபல வாரங்களாகக்கூடி கூட்டரசாங்கம் பிளவுபடுவதையும் அரசாங்கம் வீழ்வதையும் தடுக்கும் வழிவகைகள் பற்றி ஆராய்ந்து வருகின்றனர். இக்குழுவில் அனுரபிரியதர்சனயாப்பா, லசந்த அழகியவண்ண, மர்வின்சில்வா ஆகியோரடங்குவர். இவர்கள் சனாதிபதி சந்திரிகா இந்தியா பயணமாகும் முன்பு சந்தித்து உரையாடியுள்ளனர். இச்சந்திப்பின்போது சந்திரிகா ஜே.வி.பி.யுடன் சந்தித்து உரையாடவிருப்பதாகத் தெரிவித்துள்ளார். எனினும் இச்சந்திப்பின்போதும் பின்னர் இக்குழுவின் சந்திப்பின் போதும் பிரதியமைச்சர் சிறிபதி சூரியாராச்சி அழைக்கப்படவில்லை. பின்னர் இவர்கள் விமல் வீரவன்சவைச் சந்தித்த போது வீரவன்ச ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்து தாம் நீங்குவது பற்றிய எச்சரிக்கையுடனேயே பேசியுள்ளார்.

அப்போது கூட்டணியின் இணைந்த அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பது பற்றியும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.


அதன் பின்னர் வீரவன்ச குருநாகலையில் கூட்டமொன்றில் சனாதிபதியையும் அவரது கட்சியையும், குற்றம் சுமத்திப் பேசியது பற்றி குறிப்பிட்ட குழுவினர் இது மேலும் கூட்டணியின் பிரிவுக்கே இட்டுச் செல்லும் என்றும் பிரஸ்தாபித்தனர். அதற்குப் பதிலளித்த வீரவன்ச சனாதிபதி தவறான பாதையில் செல்வதாகக் குறிப்பிட்டார். அத்துடன் பொதுக்கட்டமைப்புக்கு முரணான வகையிலும் அவரது உரையிருந்ததாக யாப்பா குறிப்பிட்டார்.

வரவன்ச அப்போதைய உரையில் அடுத்த சனாதிபதி வேட்பாளராக சிறிலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் மகிந்த ராஜபக்ஷவே நியமிக்கப்பட வேண்டும் எனவும் ஆனால் ராஜபக்ஷவைத் தோற்கடிக்கவும் கூட்டணியைப் பிளவுபடுத்தவும், சூழ்ச்சி நடப்பதாகவும் தெரிவித்துள்ளார். அந்த சூழ்ச்சிகளில் ஒன்றாகவே பொதுக்கட்டமைப்பு விவகாரம் காணப்படுவதாகவும் வீரவன்ச தனது உரையில் குறிப்பிட்டார். கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டு தேர்தல் ஒன்று நடைபெறுமானால் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதியாகி தான் எதிர்க்கட்சித் தலைவியாகி விடலாம் என்று சனாதிபதி சிந்திக்கலாம் என்றும் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவரது இந்த உரையினால் கூட்டணி உருவாக பெரும் பாடுபட்டவரும் அடுத்த சனாதிபதி வேட்பாளராகக் கனவுகாணும் அநுரா பண்டாரநாயக்க கடும் விசனத்துக்குள்ளாகியிருக்கின்றார். மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக ஜே.வி.பி பெரிதும் விரும்புவதால் அதற்காகப் பல வருடங்களாகக் காத்திருக்கும் அநுரா பண்டாரநாயக்க மறக்கப்பட்டிருப்பதாக உணரக் கூடும். இதனால் குழப்பமடைந்து காணப்படும் அநுரா பண்டாரநாயக்க இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இயக்கம் ஒன்றை உருவாக்கவிருப்பதாகவும் வீரவன்ச இவ்வாறு தெரிவிப்பார் என தாம் ஒரு போதும் நினைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் கூட்டணி அரசுக்குள் இவர்கள் குழப்ப மடைந்துள்ள நிலையில் மேலும் முக்கிய உறுப்பினரான மங்கள சமரவீரவும் தனது அதிருப்தியை வெளியிட ஆரம்பித்துள்ளார். சமரவீர கூட்டணி அரசுக்குள் ஏற்படவிருக்கும் பிளவைத் தவிர்ப்பதற்கு முக்கிய பணிகளை மேற்கொண்டு வருபவராவார். அவர் இன்று சனாதிபதியைச் சந்தித்துப் பொதுக்கட்டமைப்பைக் கைச்சாத்திட வேண்டாம் என கேட்கவிருப்பதாகத் தெரியவருகிறது. சிலவேளை கூட்டரசாங்கம் பிளவுபடுமாயின் தான் அரசியலைத் துறந்துவிட்டு வெளிநாடு செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

அவர் ஜீ.எல்.பீரிசையோ எஸ்.பி.திஸாநாயக்கவையோ அல்லது மகிந்த ராஜபக்ஷவையோ ஆதரிக்க மாட்டார் எனவும் அரசியலிலிருந்து ஓய்வுபெறுவதாகவும் அறிவித்துள்ளார்.




கேசர அபேவர்தன
டெய்லி மிரர்
தமிழில் வடிவேல்

ஆகவே என்றுமில்லாதவாறு கூட்டணியரசாங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் சந்திரிகாவுக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ந்து முன்வைத்து வருவதாலும் சந்திரிகா எவரினதும் அபிப்பிராயத்தையும் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் பொதுக்கட்டமைப்பை கைச்சாத்திடுவதாகக் கூறியிருப்பதும் சிறிலங்கா அரசுக்குள் பாரிய மாற்றம் ஒன்று இந்த வாரத்திற்குள் நடைபெறுவது உறுதியாகும்.

## வாக்காளர் இடாப்பு திருத்தும் பணி ஆரம்பம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டிற்கான வாக்காளர் இடாப்பு திருத்தும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் சகல கிராம உத்தியோகத்தர்களும் வீடுவீடாகச் சென்று வாக்காளர்களைப் பதிவு செய்யும் பணியை ஆரம்பித்துள்ளனர். ஒரு குடும்பத்தில் 1987 ஆம் ஆண்டு ஆறாம் மாதம் முதலாம் திகதி பிறந்தவர்கள் இருப்பாராயின் அவர்களையும் புதிய வாக்காளர்களாகப் பதிவு செய்யும் பணி இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது. (18)

## நிரந்தர வீடுகளை அமைக்கும் காணிகள் மக்களால் சீரமைப்பு

### – வீடுகளை விரைவில் அமைக்க முயற்சி

(முல்லை)

முல்லைத்தீவுப் பகுதியில் சுனாமி அனர்த்தத்தின்போது வீடுகளை இழந்தவர்களுக்கு நிரந்தரவீடுகள் அமைப்பதற்கான காணிகள் இனங்காணப்பட்டு கிராமமக்களால் துப்புரவுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏற்கனவே மாவட்டத் தில் 5500 நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான நிதி உள்ளதாக முல்லை. மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்த வீடுகளுக்கான நிதியை அரசசார்பற்ற நிறுவனங்கள் வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (20)



# கடந்த வாரத்தில்

## 26.05.2005-01.06.2005

**26.**

➡ கன்னியாகுமரி கடலோரப் பகுதிகளில் கடல் திடீரெனப் பெருக்கெடுத்தது.

➡ பங்களாதேஷின் வடகிழக்குப் பகுதியில் தொடர் அடைமழை பெய்ததால் ஏற்பட்ட வெள்ளஅனர்த்தம் காரணமாக 10 பேர் பலி; நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டன.

➡ ஆப்கானில் கடத்தப்பட்ட இத்தாலியப் பெண் ஊழியர் கிளிமெணிடினா கென்டோனியை விடுதலைசெய்யக்கோரி தலைநகர் காபூலில் மாபெரும் பேரணி நடத்தப்பட்டது.

**27.**

➡ பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்திலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலின் வணக்கஸ்தலத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 15 பேர் உடல் சிதறிப்பலி.



➡ ஈராக்கின் டிக்ரிட் நகரில் ரோந்துப் பொலிசார் மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 18பேர் காயம்.



➡ இந்தியகுடியரசுத்தலைவர் அப்துல் கலாம் சுவிற்சர்லாந்து நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு அந்நாட்டு சனாதிபதி சாமுவேல்ஸ்கிமிட்டை சந்தித்துப் பேசினார்.



**28.**


➡ பாக்தாத்தில் "இடிமுழக்கம்" இராணுவ நடவடிக்கை ஆரம்பம். இதன்போதுசோதனை நடவடிக்கை தீவிரம்அடைந்தது.



➡ மத்திய இந்தோனேஷியாவில் அலுவேசித்தீவின் சந்தைக்குள் இடம்பெற்ற இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவங்களில் 19 பொதுமக்கள் உடல் சிதறிப்பலி.

➡ ஈராக்கின் முன்னாள் நகரசபைத் தலைவர் ''ஜபூரி''இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

➡ தமிழகம் திருச்சி அருகே கட்டப்பட்டுக்கொண்டிருந்த புதிய கட்டடம் இடிந்து விழுந்ததில் 20 பேர் நசுங்கிப்பலி,



17பேர் காயம்.

➡ சூடானின் டர்புர் பகுதியில் எரிந்த பகுதிகளை ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனான் பார்வையிட்டார்.


**29.**

➡ லெபனானிய பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெற்றது.

➡ சீனாவில் ஜனநாயகம் மலரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து ஹொங்கொங்கில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

**30.**

➡ பாகிஸ்தான் கராச்சியிலுள்ள உணவு விடுதி தீவிரவாதிகளினால் தீக்கிரை ஆறுபேர் பலி; ஏனையோரைக் காணவில்லை.



➡ இந்தியாவின் காஷ்மீர் மாநிலத்திலுள்ள கப்ரன் கிராமத்தில் பனிச்சரிவு ஏற்பட்டதன் காரணமாக 10பேர் புதைந்து பலி.

➡ சென்னையில் உள்ள டோபிகானா குடிசைப் பகுதியில் உள்ள ஒரு குடிசைகளில் ஏற்பட்ட தீவிபத்தால் 200 குடிசைகள்



தீயினால்நாசம். இரண்டு பேர் பலி.

➡ மெக்சிக்கோவின் மேற்குப் பகுதியிலுள்ள எரிமலை சாம்பலைக்கக்க ஆரம்பித்தது.

➡ நியூசிலாந்துப் பிரதமர் ஹெலன் கிளார்க் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சீனா பயணம்.

➡ ஈராக்கிய வடக்கு நகரான கிர்குக்கில் சிரேஷ்ட குர்திஷ் அதிகாரி மேஜர் ஜெனரல் அஹமத் அல்பராஷான்சி இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை.

➡ ஆப்கான் தலைநகர் காபூலிலுள்ள நேட்டோ இராணுவ தலைமையகத்தில் குண்டுடொன்று வெடித்தது.

**31.**

➡ ஈராக்கின்கிழக்குப் பிராந்தியத்தில் விமானம் மணற்புயலில் சிக்கியதில் நான்கு அமெரிக்கர் உட்பட ஈரான் அதிகாரி ஒருவரும் பலி.

➡ பா.ஜ கட்சியின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான அத்வானி ஒருவாரகால சுற்றுப் பயணமாக பாகிஸ்தான்




பயணம்.

➡ 54 ஆவது பிரபஞ்ச அழகிப்போட்டி தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இடம்பெற்றது. இதில் கனடாவைச்சேர்ந்த நாதலியா ஜெலபோவா பிரபஞ்ச அழகியாக (மிஸ்யுனிவர்ஸ்) தெரிவானார்.

➡ பங்களாதேஷில் ஏற்பட்ட கடும் வெப்பம் காரணமாக வீசிய அனல்காற்றில் 20 பேர் பலி.

➡ தென்பாகிஸ்தானின் தென்சிந்து மாகாணத்தின் முக்கிய நகரான ஹைதராபாத்துக்கருகில் பயணிகள் பேருந்து ஒன்று டிரக் வண்டியொன்றுடன் மோதிவிபத்துக்குள்ளானதில் 8 பேர் பலி.

➡ தென் ஜப்பானில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 5.7 புள்ளியாக பதிவானது.

**01.**

➡ ஆப்கானிஸ்தானின் தென் பகுதியிலுள்ள கந்தகார் நகர பள்ளி வாசல் ஒன்றில் நிகழ்ந்த தற்கொலைத் தாக்குதலில் 20பேர் பலி ; பலர் காயம்.

➡ தமிழகக் கடலில் மீன் வளத்தைப் பெருக்குவதற்காக 45 நாட்கள் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருந்த தடை நீங்கியது.

➡ பொலிஷிய நாடாளுமன்றத்தில் இடம்பெற இருந்த விவாதத்தை நடக்க விடாது தடுத்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


# சீரான போக்குவரத்திற்கு வழிவகை செய்யக்கோரல்

(புதுக்குடியிருப்பு)

கடந்த வருடம் பிற்பகுதியில் புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு வீதியில் கட்டித் திறக்கப்பட்ட பாலம் சில மாதங்களின் பின் உடைந்து சேதமாகியது. இதனால் இப்பாலத்துக்கு மேலால் இடம்பெற்றபோக்குவரவும் தடைப்பட்டது.

இருந்தும்அருகில் தற்காலிக வீதி அமைத்து, தற்காலிக போக்குவரவும் இடம்பெற்று வருகின்றது. இது மழைகாலத்தில் பயனற்றுப் போய்விடும். அதாவது இப்பாதை ஊடான போக்குவரவு தடைப்படும்.

எனவே உடைந்துபோன இப்பாலத்தை உடன் திருத்தி இவ் வீதியூடான நிரந்தரப் போக்குவரத்திற்கு சம்பந்தப்பட்டவர்கள் ஆவன செய்யவேண்டுமென மக்கள் எதிர்பார்க்கின்றனர். (08)




# இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூடு; மன்னம்பிட்டியில் தமிழ் இளைஞர் பலி

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் கடந்த வெள்ளி இரவு தமிழ் இளைஞரொருவர் இனந்தெரியாத துப்பாக்கி தாரிகளினால் வீதியில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சிவசாமி சிவகுமார் (வயது-27) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தொழில் புரியும் இவர் மன்னம்பிட்டி கடைத்தெருவிலிருந்து வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. பொலநறுவைப் பொலிசார்விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



புதுக்குடியிருப்பு நகரப்பகுதியில் நீண்டகாலமாக நகர சுத்திகரிப்பு வேலைகள் இடம்பெறவில்லை. நகரப்பகுதியில் பல மாதங்களாக அகற்றப்படாமல் உள்ள கழிவுகளையே படத்தில் காண்கிறீர்கள். படப்பிடிப்பு:- தவரட்ணம்.

# உலகவங்கிப் பிரதிநிதிகள் குழு கிழக்கு மாகாணத்திற்கு விஜயம்

(திருமலை)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் முன்னேற்றத்தை உலக வங்கியின் குழு ஒன்று திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் கடந்த முதலாம், இரண்டாம் திகதிகளில் நேரில்சென்று பார்வையிட்டது.

திருமலை மாவட்டத்தில் திரியாய், சாம்பல் தீவு ஆகிய கிராமங்களுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் செங்கலடி, மீராவோடை கிராமங்களுக்கும் உலக வங்கிக் குழு சென்றது. பின்னர் வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வீடு நிர்மாண நன்கொடைப் பணத்திற்கான காசோலை உலகவங்கிக் குழுவினரால் வழங்கப்பட்டது. (25)

# பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திட்டால் பல புரட்சிகள் நிகழ்வதைத் தவிர்க்க முடியாது

### - சனாதிபதிக்கு விமல் வீரவன்ச எச்சரிக்கை

இந்தியப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியுள்ள சனாதிபதி சந்திரிகா 16ஆம் திகதிக்கிடையில் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடவுள்ளதாகவும்,இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால் இலங்கை அரசியலில் பல புரட்சிகள் நிகழ்வது தவிர்க்க முடியாது போய்விடும் என்று ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச திவயின பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திட்டவுடன் ஜே.வி.பி யின் அமைச்சர்கள் அனைவரும் அரசிலிருந்து விலகி பாராளுமன்றில் சுயாதீனக் குழுவாக நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு இந்தப் புரட்சி ஆரம்பமாகும். கடந்த31ஆம் திகதி ஜே.வி.பி யின் அரசியலமைப்பு சபை கூடியவேளை இந்த நடவடிக்கைக்கான முழுமையான அனுமதி கிடைத்தது என்று கூறியுள்ளார்.

# "டெய்லி ரெலிகிராப்" செய்திக்கு மங்கள சமரவீர மறுப்பு

ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளில் சிறிலங்கா அரசு செயலற்றதாக இருக்கிறது என்று இங்கிலாந்தின் டெய்லி ரெலிகிராப் நாளேடு வெளியிட்டிருந்த செய்திக்கு ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர மறுப்புத் தெரிவித்து அந்நாளேட்டுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது;

சிறிலங்கா அரசு ஆழிப்பேரலைச் சீற்றத்தின் பாதிப்புகளை 48 மணி நேரத்திற்குள் கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்தது. உலக நாடுகளின் தலைவர்கள் ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை பாராட்டியிருக்கும் நிலையில் தங்களது செய்தியாளர் ஒருதலைப்பட்சமாக செய்தி வெளியிட்டுள்ளார். உண்மைகளை மறைத்துள்ளார் என்று மங்கள சமரவீர தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# மட்டு. ரெலோ அலுவலகத்தில் நள்ளிரவில் படையினர் சோதனை

மட்டக்களப்பு நகரிலுள்ள ரெலோவின் மாவட்டச் செயலகத்திலும் இராணுவத்தினர் பொலிசாரின் உதவியுடன் நேற்று முன்தினம் நள்ளிரவு சுற்றி வளைப்புத் தேடுதலை நடத்தியுள்ளனர்.

நள்ளிரவு 11.45முதல் 12.30 வரை இந்தத் தேடுதல் நடை பெற்றதாக ரெலோ தரப்பிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தேடுதலில் இராணுவத்தினரும் பொலிசாரும் மட்டுமன்றி ராசிக்குழு எனப்படும் தேசிய துணைப்படை மற்றும் இராணுவ புலனாய்வுத்துறையைச் சேர்ந்தவர்களும் ஈடுபட்டதாகவும் அந்தத் தகவல் கூறுகின்றது.

இது தொடர்பாக ரெலோ பேச்சாளரொருவர் கருத்து தெரிவிக்கையில்;

சம்பவத்தின் போது அலுவலகத்தில் எட்டுப்பேர் தங்கியிருந்தாகவும் தேடுதலுக்கு வந்த பொலிசாரும் இராணுவத்தினரும் துருவித் துருவி சகல இடங்களிலும் தேடுதலை மேற்கொண்டதாகவும் கூறினார்.

அலுவலகத்தில் தங்கியிருப்போர் விபரம் பற்றியும், செயலாளர் நாயகம் பிரசன்னா இந்திரகுமார் தொடர்பாகவும் தங்களிடம் கேட்டதாகவும் கூறிய அந்தப் பேச்சாளர் ராசிக் குழுவைச் சேர்ந்த ஒருவர் ஆத்தரமூட்டும் வகையில் கேள்வி கேட்க முற்பட்ட சமயம் தங்களுக்கும் அவருக்குமிடையில் ஒரு கட்டத்தில் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும் கூறினார்.

# புல்மோட்டை கனியமணல் நிறுவன ஊழியர்களின் போராட்டம் முடிவு

புல்மோட்டை கனியமணல் நிறுவன ஊழியர்களின் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டம் வியாழக்கிழமை முடிவுக்கு வந்தது. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் நிறுவன ஊழியர்கள் 100 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் ஐக்கிய தேசிய கட்சி அரசுப் பொறுப்பில் இருந்தபோது தெரிவு செய்யப்பட்டவர்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுப்பொறுப்பேற்றதும் இந்தத் தொழிலாளர்கள் அனைவரும் நீக்கம் செய்யப்பட்டனர். இந்நிலையில் தங்களை மீண்டும் சேவையில் அமர்த்தக் கோரி கடந்த 30ஆம் திகதி முதல் தொழிலாளர்கள் சாகும்வரை உண்ணா விரதப் போராட்டம் தொடங்கினர்.

கடந்த ஐந்து நாட்களாக இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடந்து வந்தது. இவர்களின் கோரிக்கையை நிர்வாகம் ஏற்பதாகவும், இவர்களை மீளப் பணியில் சேர்ப்பதற்கான நேர்முகத் தேர்வு வரும் 11,12ஆம் திகதிகளில் நடைபெறுமென்றும் கூட்டுத்தாபனத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஊழியர்களின் போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.


## கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம் (வ-து) முல்லைத்தீவு

# பதவி வெற்றிடம்

பதவி:- பொதுமுகாமையாளர் 101/08

சம்பள அளவுத்திட்டம்:- 5250-120X10-130X10-7750
இத்துடன் ரூபா -1250/-அடிப்படைச்சம்பளத்துடன்சேர்த்து வழங்கப்படும்.

தகைமை:- அ) கூட்டுறவுப்பணியாளருக்கான ஒன்பதாவது சம்பளத்திட்டத்தில் மூன்று வருட முகாமைத்துவம் மேற்பார்வைத்தர அனுபவம் அல்லது பத்தாவது சம்பளத்திட்டத்தில் முகாமைத்துவம்/மேற்பார்வைத்தரத்தில் ஆறுவருட (06) அனுபவம்.

அல்லது

ஆ) ஒரு பல்கலைக்கழக பட்டம் அல்லது சமமான தகைமையுடன் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்/வர்த்தகநிறுவனம் ஒன்றில் நான்கு வருடத்திற்குக்குறையாத முகாமைத்துவத்தர அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தர சான்றிதழ்/க.பொ.த. உயர்தரத்தில் மூன்று பாடங்கள் சித்தி அத்துடன் ஒருஅங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் /வர்த்தக நிறுவனத்தில் ஆறு ஆண்டுகளுக்குக் குறையாத முகாமைத்துவத்தர பதவியில் அனுபவம்.

நியந்தனை:- 01) வயது 23-45வரை கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது. சேவையிலுள்ள கூட்டுறவுப்பணியாளர்கள் தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

02) ரொக்கப்பிணையாக ரூபா 20000/- செலுத்துவதுடன், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு ஏற்பாடுகளுக்கு அமைய உறுதிப்பிணையும் செலுத்துதல் வேண்டும்.

03) முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 18.06.2005ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தலைவர், கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம், முல்லைத்தீவு என்னும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பிவைக்கப்படவேண்டும்.

தலைவர்,
கரைதுறைப்பற்று ப.நோ.கூ. சங்கம்
முல்லைத்தீவு.

(சி-12034)



# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 20 - 07 - 1944

விண்ணில் 18 - 05 - 2004



திதி:- 06.06.2005

அமரத்துவமடைந்த முன்னைநாள்
கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.ச பொதுமுகாமையாளர்

## அமரர் நாகலிங்கம் முத்துக்கிருஷ்ணன்

ஆண்டொன்று மறைந்ததப்பா
எதையப்பா நாம் காண்போம்
நீங்களில்லா உலகு வெறும் பொய்யுலகு அன்றோ
பல்கலையும் கற்றுத்தந்து
பட்டங்கள் பெற வைத்த அப்பா!
உங்கள் இனிய சொற்கேட்டு
சொந்தங்கள் ஓடி வருமே
நீங்களின்றி நாமெல்லோரும்
கலங்கி நின்று வாடுகின்றோம்.
உங்கள் திருமுகத்தை எப்போ காண்போம் அப்பா
உங்கள் ஆத்மா சாந்திக்காய் கண்ணன் கழல்களையே
வணங்கி நிற்கின்றோம்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

157, சில்வாவீதி,
வட்டக்கச்சி. (5934)



# VDP, VADPஅறிக்கைதயாரிப்பு பட்டறை நியாப்-II முல்லைத்தீவு மாவட்டம்

வைகாசிமாதம் முழுவதும் நடைபெற்ற PRA/PNA தயாரிப்புச் செயற்பாடுகளின் தொடர்ச்சியாக VDP/VADP தயாரிப்புக்கான பட்டறைகள் கீழ்வரும் அட்டவணைப்படி நியாப் மாவட்டத்திட்டப்பணிமனை, நீர்ப்பாசன வளாகம் ஒட்டுசுட்டானில் , காலை 8.30 மணியிலிருந்து நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. எனவே தயவுசெய்து சகல CST/TST குழு உறுப்பினர்களும், தமிழீழ விடுதலைப்புலிகளின் சகல அமைப்புக்களினது பிரதேச மட்ட பிரதிநிதிகளும் தங்களின் தனிப்பட்ட பிரசன்னத்தின் மூலம் இவ்வறிக்கைகளைத் தயாரித்து உங்கள் பிரதேசத்திற்குரியவற்றை பட்டறையின் இரண்டாம் நாள் இறுதியாக்கி சமர்ப்பிக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

| | | |
|---|---|---|
| 01) | மாந்தை கிழக்கு | - 02,03/06/2005 |
| 02) | துணுக்காய் | - 06,07/06/2005 |
| 03) | ஒட்டுசுட்டான் | - 09,10/06/2005 |
| 04) | புதுக்குடியிருப பு | - 13,14/06/2005 |
| 05) | கரைதுறைப்பற்று | - 16,17/06/2005. |

இதற்காக தூர இடங்களில் இருந்து வருபவர்கட்கு 2,6,9,13,16 ஆகிய தினங்களில் தங்குவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் தயவுசெய்து அதற்கான ஆயத்தத்துடன் வந்து இச்செயற்பாடுகளைத் துரிதமாக நிறைவேற்றித் தரும்வண்ணம் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எந்திரி ச.சு.சிவகுமார்,
பிரதித்திட்டப்பணிப்பாளர்,
நியாப் -முல்லைத்தீவு.

(சி-12021)

# இந்தியாவும், உக்ரைனும் இணைந்து கூட்டு வான்வெளி ஆய்வு நடத்த உடன்பாடு




இந்திய சனாதிபதி அப்துல் கலாமின் பேச்சு வார்த்தை காரணமாக இந்தியா உக்ரைன் இடையே கூட்டாக வான்வெளி ஆய்வு நடத்த உடன்பாடு காணப்பட்டுள்ளது.

உக்ரைனிற்கு சென்று அங்கு பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட சனாதிபதி கலாம் கடந்த வெள்ளி அந்த நாட்டில் உள்ள வான்வெளி மையத்திற்குச் சென்றார் உலகத்தில் அதிக ரொக்கெட் தயாரிக்கும் தளங்களில் இதுவும் ஒன்று. அங்கு விஞ்ஞானிகளுடன் அப்துல் கலாம் வான்வெளியில் இருநாடும் ஒத்துழைப்பது பற்றிப் பேசினார்.

சோவியத் ரஷ்யா ஒன்றாக இருந்தபோது உக்ரைன் வான் வெளி மையத்தில்தான் ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டன. 1970ஆம் ஆண்டு உக்ரைன் வான்வெளிமையம் ஒத்துழைப்புடன்தான் இந்தியாவின் வான் வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) ஆரியபட்டா,பாஸ்கர் -1,பாஸ்கர்-2 ஆகிய செயற்கைக்கோளை வான் வெளிக்கு அனுப்பியது குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் வான்வெளி ஆராய்ச்சி மையத்தில் விமான எதிர்ப்பு ஏவுகணை வானம், பூமி ஆகியவற்றில் இருந்து பாய்ந்து தாக்கும் ஏவுகணை ஆகியவற்றைத் தயாரிக்கிறது. அங்கு 50 ஆயிரம் விஞ்ஞானிகள் பணியாற்றுகிறார்கள். உக்ரைனின் அரசியல் தலைவர்கள் அப்துல்கலாமை "இந்தியாவின் ஏவுகணை மனிதர்'' என வர்ணித்துள்ளனர்.



பாகிஸ்தானின் தந்தை முகமது அலிஜின்னாவின் அடக்கஸ்தலத்தைப் பார்வையிட்டுத் திரும்பும் அத்வானி.

## ஜின்னாவின் சமாதிக்கு அத்வானி அஞ்சலி

பாகிஸ்தானின் தந்தை எனவாணிக்கப்படும் முகமது அலிஜின்னாவின் சமாதிக்கு அத்வானி அஞ்சலி செலுத்தினார். பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதாத்தலைவர் அத்வானி நேற்று முன்தினம் கராச்சி நகருக்குச் சென்றார். அதுதான் அவர் (அத்வானி) பிறந்த ஊர். அங்கு பாகிஸ்தான் நிறுவுனர் என்று போற்றபபடும் முகமது அலிஜின்னாவின் சமாதி உள்ளது. அந்த சமாதிக்கு அத்வானி குடும்பத்துடன் சென்றார். சமாதியில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். அப்போது பாகிஸ்தான் கடற்படை வீரர்கள் சோககீதம் இசைத்தனர். முஸ்லிம் மதத்தலைவர்கள் பிரார்த்தனை நடத்தினர்.

## லல்லுவை காங்கிரஸ் ஆதரித்தால் எனது கட்சி தனித்துப் போட்டியிடும்

–ராம்விலாஸ் பஸ்வான்

பீகாரில் லல்லுப்பிரசாத் கட்சியை காங்கிரஸ் ஆதரித்தால் 243 தொகுதிகளிலும் தனது கட்சி தனித்துப் போட்டியிடும் என்று ராம்விலாஸ் பஸ்வான் அறிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்; சிறுபான்மை இனத்தவர் பீகாரை ஆட்சிசெய்யும் வகையில் ஒரு முஸ்லிமை முதல்வராக்க வேண்டும் என்று நான் கூறியிருந்தேன். அந்தக் கருத்திலிருந்து நான் மாறுவதாக இல்லை.



பீகாரில் ராப்ரிதேவி ஆட்சி மீண்டும் அமைய விடமாட்டேன். நடக்க இருக்கும் பீகார் சட்டசபைத்தேர்தலில் லல்லுப்பிரசாத்தின் ராஷ்டிரிய ஜனதாத்தளம் கட்சிக்கு காங்கிரஸ் பகிரங்கமாகவோ. மறைமுகமாகவோ ஆதரவு கொடுத்தால் மொத்தமுள்ள 243 தொகுதிகளிலும் எனது கட்சி தனித்துப் போட்டியிடும்.

ஆனாலும் இதுபற்றிய இறுதி முடிவு வருகின்ற செப்ரெம்பர் மாதம் நடக்க இருக்கிற கட்சியின் செயற்குழுக்கூட்டத்தில் தான் எடுக்கப்படும் பீகார் முதல்வராகும் ஆசை எனக்குக் கிடையாது. பீகாரில் ஐக்கிய ஜனதாத்தளம் ஆட்சியமைக்க எனது கட்சி உறுப்பினர்களால் ஒரு பிரிவினர் கலகக் கொடிதூக்கி வெளியேறினார்கள். அதனால் இப்போது எனது கட்சி தூய்மையாகிவிட்டது என்றார் பஸ்வான்.


# கேள்வி அறிவித்தல்

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு

வடக்கு கிழக்கு மாகாண சபை

சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியின் நிதி உதவியினால் சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான திட்டம் (STAART)

உட்கட்டமைப்பு புனர்நிர்மாண திட்டம்(IRP)

01. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசானது சுனாமி அனர்த்தத்தினால் பாதிப்படைந்த பிரதேசங்களை மீட்டெடுத்தலும் மீள் எழுதலுக்குமான (STAART) திட்டச் செலவின் பொருட்டு சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி (JBRIC) நிதி உதவித் திட்டத்தின் கீழ் கடன் தொகை ஒன்றினை பெற்றுள்ளதுடன் அந்நிதியின் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தங்களின் பொருத்தமான செலவுகளை மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது..

| கேள்வி குறியீட்டு இல | வீதியின் பெயர் | இக்ராட்(வீதி) பதிவின் ஆகக் குறைந்த தரம். | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா. | கேள்விப் பிணை ரூபா. |
|---|---|---|---|---|
| STAART/NEP/JF/2 | உடுப்பிட்டி மாலி சந்தி அல்வாய்வீதி | M7 | 1,500/- | 35,000/- |
| STAART/NEP/JF/3 | பொலிகண்டி நவிண்டில் கரணவாய்வீதி | M7 | 1,500/- | 30,000/- |
| STAART/NEP/JF/4 | செல்வச்சந்நிதி கோவில் வீதி | M8 | 1,000/- | 17,500/- |

02. மேலே குறிப்பிட்ட வேலைகளுக்கான பொறி வைக்கப்பட்ட (Sealed) கேள்விகள் பிராந்திய கேள்விச் சபையின் சார்பில் வீதி அபிவிருத்தித் திணைக்கள யாழ்ப்பாண பிரதம பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

03. கேள்வி ஆவணங்களை யாழ்ப்பாணம் 657/1, கடற்கரை வீதியில் அமைந்துள்ள வீதி அபிவிருத்தித்திணைக்கள பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தைச்செலுத்தி 2005. 06. 06 ஆம் திகதி முதல் 2005. 06. 22 ஆம் திகதிவரை அலுவலகநாட்களில் காலை 9. 30 முதல் பி. ப. 3. 00 மணி வரைபெற்றுக்கொள்ள முடியும்.

04. கேள்வி ஆவணங்களை மேற்கூறிய அலுவலகத்தில் கட்டணம் எதுவுமின்றிப் பார்வையிடமுடியும்.

05. கேள்விகள் அவை சமர்ப்பிக்கும் நாளிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியானவையாகவிருத்தல் வேண்டும்.

06. கேள்விகள் மேலே கூறப்பட்ட கேள்விப்பிணையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், பிணை ஆனது சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 118 நாட்களுக்கு செல்லுபடியாகுமாறு இருத்தல் வேண்டும்.

07. கேள்விகள் சமர்ப்பிக்கப்படவேண்டிய இறுதித் திகதி 2005. 06. 23 பி. ப. 2. 30 மணியாகும்..

08. பொறிவைக்கப்பட்ட கேள்விகள் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ முடிவு நேரத்திற்கு முன்பாக தலைவர், கேள்விச்சபை பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தித் திணைக்களம் யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்கப் பெறத்தக்கதாக சமர்ப்பிக்கப்படவேண்டும்.

09. கேள்விகள் யாவும் மேற்கூறிய முகவரியில் கேள்வி நேரம் முடிவுற்ற உடன் திறக்கப்படும்

10. கேள்விகள் கோருவோரோ அல்லது அவர்களதுஅங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ கேள்விகள் திறக்கப்படும்போது சமுகமளிக்க முடியும்.

11. மேலதிக விபரங்களுக்கும் விளக்கங்களுக்கும், யாழ்ப்பாண பிரதம பொறியியலாளரை 021–2225071 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். .

எந்திரி.எஸ்.பி.சிவநேசன்,
பிரதம பொறியியலாளரும், தலைவரும்,
பிராந்திய கேள்விச்சபை,
வீதி அபிவிருத்தித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

(சி-12186)


## பாகிஸ்தான் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்த வேண்டும்

-நட்வர்சிங்

நல்லெண்ண நடவடிக்கை தொடர எல்லை தாண்டிய தீவிரவாதத்தை பாக். நிறுத்தவேண்டும் என்று இந்திய வெளியுறவு மந்திரி நட்வர்சிங் கருத்துக் கூறியுள்ளார்.

ரஷ்யாவின் விளாடிவாஸ்டாக் நகரில் இந்தியா- ரஷ்யா- சீனா ஆகிய மூன்று நாடுகளின் வெளியுறவு மந்திரிகளின் கூட்டம் நடந்தது அதில் இந்தியா சார்பாக பங்கேற்ற வெளியுறவுத்துறை அமைச்சர் கே.நட்வர்சிங் நேற்றுமுன்தினம் ஹொங்கொங் சென்றார். அங்கு இந்திய சமூகத்தினர் மத்தியில் அவர் பேசியபோது கூறியதாவது;


பாகிஸ்தானுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ள இந்தியா இன்னும் பல நல்லெண்ணத் திட்டங்களை தன்வசம் வைத்துள்ளது. அதே நேரத்தில் எல்லை தாண்டி பயங்கரவாதிகளை அனுப்புவதை பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. தீவிரவாதிகளை இந்தியாவுக்குள் அனுப்பும் விடயத்தில் பாகிஸ்தான் சரிவர செயற்பட்டால்தான் இந்தியாவும் அதன் நல்லெண்ண நடவடிக்கைகளைத் தொடர முடியும் எனக் கூறினார்.

# இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மேற்கிந்தியத்தீவு சிறப்பான பதிலடி




ஜமேக்கா கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றுவரும் இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியின் இரண்டாம்நாளான நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி தனது முதல் இனிங்சில் நான்கு விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 275 ஓட்டங்களை எடுத்து பாகிஸ்தானின் 375 ஓட்டங்களுக்கு சிறந்த பதிலடி கொடுத்துள்ளது.

பாகிஸ்தான் இரண்டாவது நாளில் தனது முன்னைய ஓட்ட எண்ணிக்கையான 336 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்கள் என்ற நிலையில் ஆட்டத்தைத் தொடர்ந்து ஆடி மேலும் 38 ஓட்டங்களில் எஞ்சிய நான்கு விக்கெட்டுக்களையும் இழந்தது. மேற்கிந்தியத்தீவுகள் வீரர் கொலிமோர் மொத்தமாக 78 ஓட்டங்களைக் கொடுத்து ஏழு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.




பின்னர் தனது ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் கிறிஸ்கெய்லின் விக்கெட்டை இழந்தது. அவர் 33 ஓட்டங்களையும், டெவன் ஸ்மித் 25 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். அணியின் துணைத் தலைவர் ராம் நரேஷ் சர்வான் அரைச் சதத்தைப் பெற்று ஆட்டமிழந்தார். அணித் தலைவர் சந்தர்போல் ஆட்டத்தின் கடைசிப் பந்தில் ஆட்டமிழந்தார். நட்சத்திர வீரர் பிரைன் லாறா தனது 30ஆவது (125) சதத்தைப் பெற்று ஆட்டமிழக்காது இருக்கின்றார்.




மேற்கிந்தியத்தீவு-பாகிஸ்தான் இடையே கிங்ஸ்டனில் நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியுடன் நடுவர் பதவியிலிருந்து ஷெப்பேர்ட் ஓய்வுபெறுவதை முன் னிட்டு ஜமேக்கா கிரிக்கெட் சங்கம் வெள்ளிக்கிழமை கூடியது. கௌரவ கேடயத்துடன் இங்கிலாந்தைச் சேர்ந்த டேவிட் ஷெப்பேர்ட் நடுவர்களில் மிகவும் மதிக்கப்பவர். கடந்த 25 ஆண்டுகளாக 92 டெஸ்ட் போட்டிகளில் பணியாற்றியுள்ளார்.

## வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆஷஸ் தொடரில் பங்கேற்க அவுஸ். அணி பயணம்



முத்தரப்பு ஆஷஸ் தொடரில் பங்கேற்பதற்காக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி வீரர்கள் நேற்று முன்தினம் இங்கிலாந்து சென்றனர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாநதில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு முத்தரப்பு ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ்தொடரில் பங்கேற்கவுள்ளது. இதற்கான 16 பேர் கொண்ட ஆஸி அணி வீரர்கள் நேற்று முன்தினம் இங்கிலாந்து சென்றனர். ஆஷஸ் தொடரில் பங்கேற்பதற்கு முன்பாக இந்த அணி வீரர்கள் பிரான்சில் உள்ள "வில்லியர்ஸ் பிரிட்டோனியக்ஸ்" என்ற இடத்திற்குச் செல்லவுள்ளனர். பிரான்சிலுள்ள இந்த இடத்தைக் காப்பாற்றுவதற்காக நூற்றுக்கணக்கான அவுஸ்திரேலிய போர்வீரர்கள் தங்கள் உயிரை தியாகம் செய்துள்ளனர். முதலாம் உலகப்போருக்கு நிகரான சரித்திரப்புகழ் இதற்குண்டு. ஒரு வலுவான தொடருக்கு முன்னதாக இதுபோன்ற இடங்களுக்குச் சென்று மனரீதியாக தைரியம் பெற ஆஸி அணி விரும்புகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீவ்வோ தலைமையிலான அவுஸ்திரேலிய அணி துருக்கியிலுள்ள கலிப்போலி என்ற இடத்திற்குச் சென்றிருந்தது. 1915இல் இங்கு நடந்த போரில் துருக்கிப்படைகளோடு மோதியதில் ஒன்பதாயிரம் அவுஸ்திரேலிய வீரர்கள் மரணமடைந்தனர். இருபதாயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். அப்போதைய பயணத்தில் ஒரு வீரராக இடம்பெற்றிருந்தார் தற்போதைய தலைவர் பொண்டிங். தனது அனுபவத்தை மெய்சிலிர்க்க அவர் கூறியதாவது; " கடந்த முறை கலிப்போலி சென்ற அனுபவத்தை மறக்கமுடியாது. ஒவ்வொரு ஆஷஸ் தொடருக்கு முன்னதாக இதுபோன்ற பயணத்தை மேற்கொள்ளவுளளோம். 18 ஆண்டுகளாக எங்கள் அணி இந்தத் தொடரில் முத்திரை பதித்துவருகிறது. இம்முறையும் சாதிப்போம்" என்றார்.

## பங்களாதேஷிக்கு எதிரான இறுதி டெஸ்ட் இங்கிலாந்துக்கு ஒரு இனிங்ஸ் 27 ஓட்டவெற்றி



பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியை ஒரு இனிங்ஸ் 27 ஓட்டங்களால் வெற்றிபெற்று இங்கிலாந்து அணி போட்டித் தொடரை 2-0 என்ற நிலையில் கைப்பற்றியது.

இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 343 ஓட்டங்கள் பெறவேண்டும் என்ற நிலையில் இரண்டாவது இனிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் போட்டியின் இரண்டாம் நாள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 297 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த பங்களாதேஷ் போட்டி ஆரம்பமான சிறிது நேரத்திலேயே 316 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.



துடுப்பாட்டத்தில் அப்ராப் அகமட் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களையும், ஓமர் 71 ஓட்டங்களையும், கபிபுல் பசார் 63 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் கொக்காட் ஐந்து விக்கெட்டுக்களையும், பிளின்டொப் மூன்று விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

முன்னதாக முதல் இனிங்சில் பங்களாதேஷ் 104 ஓட்டங்களையும், இங்கிலாந்து மூன்று விக்கெட்டுக்களை இழந்து 447 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

## கவுண்டி கிரிக்கெட் போட்டி கங்குலியின் மோசமான ஆட்டம் தொடர்கிறது




கங்குலியின் மோசமான ஆட்டம் கவுண்டி கிரிகெட் போட்டியிலும் தொடருகிறது.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி சமீப காலங்களில் மோசமாக விளையாடி வருகிறார். அவரது ஆட்டம் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் மிகவும் மோசமாக இருந்தது.

இதனால் கடும் விமர்சனத்துக்குள்ளான கங்குலி அணி மெதுவாக பந்துவீசிய குற்றச்சாட்டில் சிக்கினார். இதனை விசாரித்த சர்வதேச கிரிக்கெட் சபை கங்குலி ஆறு ஒருநாள் போட்டியில் விளையாட தடைவிதித்தது. இந்த நிலையில் கங்குலி தனது [illegible]த்தை மேம்படுத்தும் வகையில் [illegible]ந்தில் உள்ள கவுண்டி கழகத்தில் ஆட முடிவு செய்து கிளாமோர்கான் கிளப்பில் ஒப்பந்தமாகியுள்ளார்.

கவுண்டி போட்டியில் கிளாமோர்கான்-சுசெஸ் அணிகள் மோதும் ஆட்டம் லண்டனில் நடந்து வருகிறது. சுசெஸ் அணி முதல் இனிங்சில் ஐந்து விக்கெட் இழப்பிற்கு 497 ஓட்டம் குவித்தது.

பின்னர் முதல் இன்னிங்சை ஆடிய கிளாமோர்கான் அணி மூன்றாவது நாள் ஆட்டநேரம் முடிவில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 289 ஓட்டம் எடுத்தது. 'பலவோனை' தவிர்க்க 59 ஓட்டம் எடுக்க வேண்டும்.

இப் போட்டியில் கங்குலி மூன்று பந்துகளை எதிர்கொண்டு ஓட்டம் எதுவும் எடுக்காமல் ஆட்ட மிழந்து வெளியேறினார். கங்குலியின் மோசமான ஆட்டம் கவுண்டி போட்டியிலும் தொடர்கிறது.




## வீரர்கள் அதிருப்தி


முல்லைத்தீவில் விளையாட்டு மைதானம் இல்லாதமையினால் விளையாட்டு வீரர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

போரினால் பாதிக்கப்பட்டு முல்லைத்தீவு மீண்டும் கட்டியெழுப்பப்பட்டு பின்னர் சுனாமியினால் முற்றுமுழுதாக அழிக்கப்பட்ட நிலையில் முல்லைத்தீவில் இருந்த ஒரேயொரு விளையாட்டுத் திடலான முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானம் தற்போது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், முல்லைத்தீவில் எந்தவொரு விளையாட்டு நிகழ்வுகளும் இதுவரை நிகழவில்லையெனவும், விளையாட்டு வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு விளையாட்டு மைதானம் இல்லாதமையினால் வெளியிடங்களில் நடைபெறும் போட்டிகளில் வீரர்கள் பங்குபற்று வதும், மிகவும் அரிதாகவே காணப்படுவதாகவும் முல்லை மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

(20)

## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் பட்டம் வென்றார் ஹெனின்



பிரெஞ் ஓபன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் பெல்ஜியம் வீராங்கனை ஜஸ்டின் ஹெனின், மேரிபியர்சை தோற்கடித்து 'சம்பியன்' பட்டம் வென்றார்.

கிராண்ட்ஸ் லாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ் ஓபன் டென்னிஸ் போட்டி பரிசில் நடந்து வருகின்றது. இதன் பெண்கள் ஒன்றையர் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடந்தது.இறுதிப்போட்டியில் பத்தாம் நிலை வீராங்கனை ஜஸ்டின் ஹெனின் (பெல்ஜியம்), 21 ஆம் நிலை வீராங்கனையான மேரிபியர்சை (பிரான்ஸ்) எதிர்கொண்டார்.


இதில் 23 வயதான ஜஸ்டின் ஹெனின் அபாரமாக ஆடியதால் அவருக்கு ஈடு கொடுக்க முடியாமல் 30 வயதான மேரிபியர்ஸ் திணறினார்.

இந்த ஆண்டில் 'களிமண்' தரையில் அடுக்கடுக்கான வெற்றியை பெற்ற ஜஸ்டின் ஹெனின் 6-1,6-1 என்ற நேர் செட்டில் மேரிபியர்சை தோற்கடித்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இதற்கு அவருக்கு 62 நிமிடமே தேவைப்பட்டது. ஜஸ்டின் ஹெனின் வென்ற நான்காவது கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டம் இதுவாகும். அவர் ஏற்கனவே 2003 ஆம் ஆண்டில் பிரெஞ் ஓபன், அமெரிக்க ஓபன் பட்டமும், 2004 -ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய ஓபன் பட்டமும் வென்றுள்ளார்.

## அமெரிக்க வீரர் டிம் மொன்ட் கொமரி ஊக்க மருந்து சோதனைக்கு உட்பட்டார்

அமெரிக்காவின் 100 மீற்றர் ஓட்டசாதனையாளரான டிம் மொன்ட்கொமரி ஊக்கமருந்து பாவனை தொடர்பான விசாரணைக்குட்படவுள்ளார். எனினும் அதற்கு முன்பாக அவர் அண்மையிலும் ஒரு சாதனை நடத்தியுள்ளார். யஸ்ரின் கஸ்ரின் என்ற வீரரின் 10.10 என்ற செக்கன் நேரத்தை இவர் கடந்து 9.84 என்று நிலை நிறுத்தியுள்ளார். அவர் போதை வஸ்து பாவித்த குற்றச்சாட்டுக்கு எதிராக மேன் முறையீடு செய்துள்ள நிலையில் இது உறுதிசெய்யப்பட்டால் தனது சகாவான ஒலிம்பிக் சாதனை வீரர் மேரியன் ஜோன்ஸ் போன்று ஆயுள் தடையை எதிர்நோக்க வேண்டிவரலாம்.

## சிந்தனைக்கு



மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06-06-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# திசை திருப்பல்!

இனப்பிரச்சினைக்கு அரசியல்தீர்வு, சுனாமி அனர்த்த மீள் கட்டமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு என்பவற்றை ஓரம் தள்ளிவிட்டு தற்பொழுது விடுதலைப்புலிகளின் 'வான்படை' தொடர்பான விடயத்தைத் தூக்கிப் பிடிப்பதிலும், இவ் வான்படை விவகாரம் ஏதோ பொதுக்கட்டமைப்பிற்கு இடையூறானதொன்றாகிவிட்டது போன்றும் சிறிலங்கா ஆட்சியாளர்கள் பேசத்தலைப்பட்டுள்ளனர்.

இந்தவகையில் விடுதலைப்புலிகள் வான்படைத்திறனை வளர்த்துக்கொண்டிருப்பது ஏற்கனவே சுனாமி பொதுக்கட்டமைப்பை எதிர்த்து வருவோருக்குச் சாதகமாகிவிடும். ஆகையினால், இதனைக் களையுமாறு அமெரிக்கா புலிகளை வலியுறுத்த வேண்டுமென சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசாரைஸைச் சந்தித்து வலியுறுத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் வான்படை விவகாரமானது தற்பொழுது பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக ஆட்சியாளர்கள் கையில் எடுத்துக்கொண்டுள்ள விவகாரம் என்பது ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்டதொன்றுதான். அப்படி இல்லாதுவிட்டால் பழையதொரு விவகாரமான புலிகளின் 'வான்படை' விவகாரத்தை அரசாங்கம் தற்போது தூக்கிப்பிடித்துக் கொண்டிருக்கவேண்டிய தேவை ஏற்பட்டிருக்கமாட்டாது.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் எப்பொழுதுமே தொட்டிலையும் ஆட்டிபிள்ளையையும் கிள்ளிவிடும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே வழக்கமானதாகும். அதாவது பேச்சுவார்த்தை ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய நிர்ப்பந்தமோ அன்றி தீர்வுஒன்றை முன்வைக்க வேண்டிய கட்டாயமோ ஏற்படும்பட்சத்தில் அவற்றிற்கு எதிரான சக்திகளுக்குத் தூண்டுதலை அளித்தலும் ஏவிவிடுதலும் வழக்கமாகும்.

எடுத்துக்காட்டாக திருமலையில் புத்தர் சிலை விவகாரமும், புலிகளின் வான்படை விவகாரமும் அத்தகையதே ஆகும். அதாவது இனப்பிரச்சினைத் தீர்வுயோசனைகளுக்கு முன்பு அவற்றை பேரினவாத சக்திகள் மெல்வதற்குத் தீனியாகப் போட்டு விடுவதே அரசாங்கங்கள் ஒவ்வொன்றினதும் அணுகுமுறையாகும்.

அவ்வாறு இல்லாதுவிட்டால், திருமலைபுத்தர்சிலை விவகாரத்தை பெரியளவினதாக வளர விட்டிருக்க வேண்டிய தேவை அரசாங்கத்தில் ஏற்பட்டிருக்காது. அதே போன்று புலிகளின் வான்படை விவகாரமானது பொதுக்கட்டமைப்பிற்கு ஏதோ முட்டுக்கட்டையாக உருவாகிவிட்டது போன்றதொரு தோற்றப்பாட்டை உருவாக்கியிருக்க வேண்டிய அவசியமில்லை.

அதுவும் இல்லாமல்,இன்று விடுதலைப் புலிகளின் 'வான்படை' யின் அச்சுறுத்தலைச்சமாளிக்கவென சிறிலங்கா அரசிற்கு இந்தியா உதவி அளிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன்மூலம் ராடர் சாதனங்கள் உட்பட ஏனைய விமான எதிர்ப்பு சாதனங்கள் சிறிலங்கா அரசிற்கு கிட்டக் கூடும் அதாவது பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டதாகிவிட்டது.

இந்தவகையில் விடுதலைப் புலிகளின் 'வான்படையை' எதிர்கொள்ள இராணுவ ரீதியிலான செயற்பாடுகளைச் சிறிலங்கா ஆட்சியாளர்கள் மேற்கொண்டு விட்டனர் எனக் கூறலாம். இந்த நிலையில் புலிகளின் வான்படை பொதுக்கட்டமைப்பிற்கு அச்சுறுத்தல் எனவும் அதனைக் கட்டுப்படுத்த அமெரிக்கா முனைய வேண்டும் எனக் கோருவதும் நாசுக்கானதொரு இராஜதந்திர செயற்பாடாகும். ஏனெனில் இம் முயற்சியானது அமெரிக்கா போன்ற நாடுகள் அண்மைக்காலத்தில் பொதுக்கட்டமைப்புக் குறித்துக் கொண்டுள்ள அக்கறையை திசை திருப்புவதற்கு மேற்கொள்ளும் ஒன்றாகவே நோக்கத் தக்கதாகும்.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் சாதகமானதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளமை சிறிலங்கா ஆட்சியாளருக்கு திருப்தி அளிப்பதாகஇல்லை. சிறிலங்காவிற்கு விஜயம் செய்திருந்த தெற்காசியப் பிராந்தியத்திற்கான அமெரிக்க வெளியுறவுத்துறை இராஜாங்கச் செயலர் கிறிஸ்டினா றொக்கா தொடக்கம் ஐ.நா விசேட தூதுவராக வந்திருந்த அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில் கிளிங்டன்வரை பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதோடு அரசு இவ்விடயத்தில் அக்கறைகாட்டுதல் வேண்டும் என்ற கருத்தையே வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால், இதுவரையில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இவ்விடயத்தில் முன்னேற்றம் எதனையும் காணவில்லை. சந்திரிகாவின் அரசாங்கம் வாயளவில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படும் எனப் பேசி வருகின்றதேயொழிய நடைமுறையில் முன்னேற்றகரமான செயற்பாடுகள் எதனையும் மேற்கொண்டதாக இல்லை.

இந்நிலையில், அமெரிக்கா போன்றவற்றின் கருத்தை திசை திருப்பும் நோக்கிலும், பொதுக்கட்டமைப்பு நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தும் நோக்கிலுமே தற்பொழுது விடுதலைப் புலிகளின் 'வான்படை' விவகாரம் கையில் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், சிறிலங்கா அரசாங்கத்தின் இப்போக்கை அதன் கடந்த கால நடவடிக்கைகளைச் சற்றுத் திரும்பப் பார்ப்பவர்கள் அனைவருமே இலகுவிலேயே புரிந்துகொள்ள முடியும்.

### -ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு விவகாரம்-

# சனாதிபதி சந்திரிகாவுக்கு எதிராக மங்கள சமரவீர தலைமையில் அணி!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிராக ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமையில் ஒரு அணி உருவாக்கப்பட்டு வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'லங்காதீப' சிங்கள நாளேட்டிற்கு மங்கள சமரவீர அளித்துள்ள பேட்டியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டால், ஆளும் கூட்டணி அரசு பலவீனமடைந்துவிடும், அழிநதுவிடும். அது உபயோகமற்றது. இது தேவைதானா என்பது குறித்து மீளவும்.. ஒரு முறை சிந்திக்க வேண்டும்.

பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதால் பயன் ஏதுமில்லை என்று ஆளும் சிறிலங்கா மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சி உறுப்பினர்களும், மக்களும் கருதுகின்றனர். பொதுக் கட்டமைப்பை ஆளும் கட்சியின் பெரும்பான்மை உறுப்பினர்கள் எதிர்த்தால் அரசுக்கு சிக்கல் ஏற்படும்.

இது போன்ற முக்கியமான உறுதியான முடிவுகள் மேற்கொள்ள இது சரியான தருணம் அல்ல. அப்படித்தான் பொதுக்கட்டமைப்பு உருவாக்க வேண்டுமானால் அது குறித்து மீண்டும் நாம் யோசிக்கலாம். தற்போது அரசை அது ஆபத்தில் சிக்க வைத்துவிடும் என்றார் அவர்.

இதனிடையே பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வெளிப்படையாக சனாதிபதி சந்திரிகா விளக்கம் அளிக்க வேண்டும் என்று ஆளும் கூட்டமைப்பு அரசின் விளையாட்டுத்துறை துணை அமைச்சர் சிறீபதி சூரியாராச்சி பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மற்றொரு ஊடகத்திற்கு கூறியுள்ளதாவது; பெரும்பாலான அமைச்சர்கள் மற்றும் துணை அமைச்சர்களுக்கு பொதுக் கட்டமைப்பின் உள்ளடக்கம் தெரிவிக்கப்படவில்லை. பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதற்கு முன்பாக அரசியல் தலைவர்களுக்காவது அது குறித்து சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விளக்கம் அளிக்க வேண்டும். அப்போது தான் அது குறித்த கருத்தை அனைவரும் தெரிவிக்க இயலும். வெளிப்படையாக அறிவித்தால் தான் மக்களுக்கும் நமக்கு வாக்களித்தவர்களுக்கும் பதில் கூற முடியும். இது குறித்து சனாதிபதிக்கு நான் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளேன்.

இப்பொதுக்கட்டமைப்புக் குறித்து ஊடகத்துறையினரும், பொதுமக்களும் கேள்வி எழுப்புகின்றனர். ஆனால் நாங்கள் எவ்வித பதிலும் சொல்ல இயலாத நிலையில் இருக்கின்றோம். இது குறித்து மின்னணு ஊடகங்களில் விவாதங்களுக்கு அழைத்த போதும் அது குறித்த விவரங்கள் தெரிவிக்கப்படாத காரணத்தால் நாங்கள் அத்தகைய நிகழ்வுகளில் பங்கேற்கவில்லை. இதை அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளேன் என அவர் தெரிவித்தார்.

# வடக்கு கிழக்கை இரண்டாகப் பிரிக்க சிறிலங்கா பாராளுமன்றில் பிரேரணை!

### -ஜாதிகஹெல உறுமய கொண்டுவரும்

(கொழும்பு)

வடகிழக்கு மாகாணத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு ஜாதிகஹெல உறுமய பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருதற்கு முடிவு எடுத்துள்ளது.

இதற்கான எல்லா நடவடிக்கைகளும், முடிவடைந்துள்ளதாகவும், வெகுவிரைவில் இம்மசோதா பாராளுமன்ற பிரதம செயலாளரிடம் கையளிக்கப்படும் எனவும் ஜாதிக ஹெல உறுமய' பிரதம செயலாளர் ஓமல்பே சோபித்த தேரர் குறிப்பிட்டுள்ளார்.

# புலிகளுடன் பொதுக்கட்டமைப்புக்கு இந்தியா ஆதரவு; இந்தியாவின் நிலைப்பாட்டிற்கு கூட்டமைப்பு வரவேற்பு!

(கொழும்பு)

ஆழிப்பேரலை மீளமைப்புக்காக தமிழீழ விடுதலைப்புலிகளுடனான பொதுக்கட்டமைப்பை சிறிலங்கா அரசு உருவாக்குவதற்கு இந்தியா ஆதரவு தெரிவித்துள்ளதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் இது குறித்து கூறியுள்ளதாவது;

பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கும் இந்திய-சிறிலங்கா கூட்டறிக்கை வடக்கு-கிழக்கு மக்களின் உணர்வுகளை பிரதிபலிப்பதாக இருக்கிறது. ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை ஆதரித்திருக்கும் இந்தியாவின் புரிந்துணர்வை வரவேற்கின்றோம் எனத்தெரிவித்தார்.

# ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பிற்கு கூட்டமைப்பின் ஆதரவைக்கோர அரசு முடிவு

### -சனாதிபதி செயலகம் தகவல்

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவதற்கு முன்பாக ஜே.வி.பியினருடன் கடைசிச் சுற்றுப் பேச்சுக்களை சனாதிபதி நடத்துவார் என்றும், ஜே.வி.பி தொடர்ந்து பொதுக்கட்டமைப்பை எதிர்த்தால் அதன் நான்கு அமைச்சர்களை அமைச்சரவையிலிருந்து நீக்கக்கூடும் என்றும் கூறப்படுகிறது. ஜே.வி.பி ஆட்சியிலிருந்து வெளியேறும் சூழலில் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியின் உதவியை நாடவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆதரவையும் கோர ஆளும் தரப்பு முடிவு செய்துள்ளதாக சனாதிபதி செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசின் அமைச்சர்கள் மற்றும் சனாதிபதியின் ஆதரவாளர்கள் சிலர் ஐக்கிய தேசியக்கட்சியுடன் கடந்த வாரம் ஆலோசனை ஒன்றை இது தொடர்பாக நடத்தியள்ளனர்.

ஜே.வி.பி யை அமைச்சரவையிலிருந்து வெளியேற்றும் நிலையில் அல்லது ஜே.வி.பி வெளியேறும் நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை அக் கட்சி ஆதரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இச்சந்திப்பையும், வேண்டுகோளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் ஒருவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பொதுக்கட்டமைப்பில் எதிர்வரும் 12 ஆம் அல்லது 15 ஆம் திகதி கையெழுத்திடக் கூடும் என்று கூறப்படுகிறது.

கடந்த மே 28 ஆம் திகதியன்று கம்பஹா மாவட்ட கட்சி நிர்வாகிகளிடம் பேசிய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசிலிருந்து ஜே.வி.பி வெளியேறினாலும் பொதுக் கட்டமைப்பில் கையெழுத்திடுவேன் என்று கூறியுள்ளார். இச்சந்திப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் நடந்துள்ளது.

தற்போது இந்தியப் பயணத்தை முடித்துவிட்டு கொழும்பு திரும்பி உள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது ஆதரவாளர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவது குறித்து ஆலோசனை நடத்தியுள்ளார்.

அத்துடன் சோதிடர்களின் ஆலோசனையையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெற்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த மூன்றாம் திகதிக்குப் பின்பு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கான எதிர்ப்புக்கள் அடங்கிவிடும் என்று சோதிடர்கள் கூறியுள்ளார்களாம். அதனால் அவரும் நம்பிக்கையோடு இருக்கிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பில் சனாதிபதி கையெழுத்திடும் காலத்தில் நோர்வே அனுசரணையாளர்களும், கொழும்பிற்கு வருகை தரக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. சனாதிபதி கையெழுத்திட்டால் சர்வதேச நாடுகள் பலவும் சனாதிபதியின் முடிவை வரவேற்று அறிக்கைகள் வெளியிடக் கூடும் என்ற எதிர்பார்ப்பு சனாதிபதி செயலகத்திற்கு இருக்கிறது.

# திருமலையில் புலிகளின் விமானத்தளம்; "சண்டே ரைம்ஸ்" வார இதழ் தகவல்!

(கொழும்பு)

தமிழீழத் தலைநகரான திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் விமான ஓடுபாதை ஒன்றை அமைத்து வருகின்றனர் என்று கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே ரைம்ஸ் வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அதில் இது குறித்து தெரிவிக்கப் பட்டுள்ளதாவது;

திருகோணமலையில் சம்பூரின் தெற்குப் பகுதியில் தகரவாடியில் 25 ஏக்கர் பரப்பளவில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு பெரும் எண்ணிக்கையிலான சீமெந்து மூட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன. இந்த அமைவிடமானது திருகோணமலை துறைமுகத்தை நோக்கியதாகவுள்ளது. இந்தச் சூழலானது திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் விமானத்தளம் ஒன்றை அமைக்கும் முயற்சியாக இருக்கக்கூடும்.

இது குறித்து கடந்த மாதம் சிறிலங்கா புலனாய்வுத்துறை அரசுக்குத் தகவல் அனுப்பியிருக்கிறது. இந்த விமான ஓடுபாதை கட்டமைக்கப்பட்டு வருவது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் இறுதியான முடிவு எதையும் கூறவில்லை.

சிறிலங்காவின் ஆளில்லா வேவு விமானங்கள் மட்டுமே அப்பகுதியில் துப்புரவாக்கப்பட்டு வருவதை உறுதி செய்திருக்கிறது. அப்பிரதேச மக்கள் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் அப்பகுதியில் துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருவதை உறுதி செய்துள்ளதை அறிகிறோம்.

லொறிகளில் சீமெந்தும், இரும்புகளும் இறக்குவதை சிலர் பார்த்துள்ளனர். நூற்றுக்கணக்கான கட்டுமானப் பொருட்களுக்கு சம்பூரை அண்டியுள்ள மொத்த விநியோகஸ்தர்களிடம் கொள்வனவு செய்யகட்டளை கொடுக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இந்த விமான ஓடுபாதை திருகோணமலையில் அமைந்துவிட்டால் தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ நகர்வுகள் அனைத்தும் திருகோணமலையை நோக்கியதாகவே இருக்கும். இதன் மூலம் தமிழீழத் தனியரசின் தலைநகராக திருகோணமலையைப் பிரகடனப்படுத்துவார்கள்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் சம்பூர் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரித்த தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தப் பாதுகாப்பு நகர்வுகள் அனைத்தும் திருகோணமலையை நோக்கியாக இருக்குமாறு அமைத்தனர்.

இந்த விமான ஓடுபாதை தொடர்பான செய்தி உறுதிப்படுத்தப் பட்டுவிட்டால் கிளிநொச்சியையும், திருமலையையும் வான்வழியே விடுதலைப்புலிகள் இணைக்கக்கூடும். தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தம்மை வலுப்படுத்திக் கொண்டுள்ளனர் என்று அச்செய்தியில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்க, சுவிஸ் விமான நிறுவனங்களில் பொறியியலாளர்களாக கடமையாற்றும் தமிழர்கள் இருவர் மூன்று வாரங்களுக்கு முன் கட்டுநாயக்க வழியாக கொழும்பு சென்று ஓமந்தை சோதனைச் சாவடியூடாக கிளிநொச்சி சென்று சுமார் இரண்டு வாரங்களாக அங்கு தங்கிருந்துள்ளனர். ஆனால், குறிப்பிட்ட இரு பொறியியலாளர்களும் இலங்கையை விட்டுச்சென்ற பின்னர்தான் அவர்களின் வருகை பற்றிய உண்மையான தகவல்கள் கிடைத்திருக்கின்றன எனவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாதரவத்தைப் பகுதியில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வாதரவத்தைப் பகுதியிலுள்ள கேதுவார் பிள்ளையார் கோவிலடிப் பகுதியிலிருந்து பொதுமகன் ஒருவரது சடலம் நேற்று மீட்கப் பட்டுள்ளது. அச்சடலம் அதே பகுதியைச் சேர்ந்த பத்துப் பிள்ளைகளின் தந்தையான தங்கராசா சந்திரகுமார் (வயது-44) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆலயப் பகுதியிலுள்ள பற்றையொன்றினுள் கிடந்த சடலத்தில் கழுத்தில் சேலையினால் சுருக்கிட்ட தடயம் காணப்பட்டுள்ளது. எனினும் உடலில் அடிகாயங்களும் காணப்படுவதாக அச்சுவேலிப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

(27)

-ஓமந்தை பிள்ளையார் கோவிலில் வைக்கப்பட்ட-

# அகற்றப்பட்ட புத்தர் சிலை; படையினர் மீண்டும் வைப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தை பிள்ளையார் கோவிலடியில் இராணுவத்தினரினால் வைக்கப்பட்டதெனக் குறிப்பிடப்படும் புத்தர் சிலை மர்மமான முறையில் அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்டு அருகிலுள்ள பற்றையில் வைக்கப்பட்டிருந்தது.

இச் சிலையை நேற்றுக் காலை மீட்ட இராணுவத்தினர் மீண்டும் அதனை பிள்ளையார் கோவிலடி வளவில் வைத்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இந்து ஆலய வளவில் வைக்கப்பட்டுள்ள சிலையை அகற்ற வேண்டுமெனக் கோரி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதியிடம் கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பூநகரியில் கரையொதுங்கிய "டொல்பின்கள்" மீண்டும் நேற்றுக் கடலில் விடப்பட்டன

(அலுவலக செய்தியாளர்)

பூநகரி சுட்டதீவு கடல் நீரேரியில் கரைஒதுங்கி தத்தளித்துக்கொண்டிருந்த ஆழ்கடல் நீர்வாழ் உயிரினமான இரண்டு 'டொல்பின்கள்' அப்பகுதி மக்களின் கடுமையான முயற்சியால் காப்பற்றப்பட்டு மீண்டும் கடலில் விடப்பட்டன.

நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் மேற்படி கடல் பகுதியில் இறந்த நிலையில் காணப்பட்ட 'டொல்பின்' ஒன்றை இவ்விரண்டு டொல்பின்களும் இணைந்து கரையை நோக்கி கொண்டு வந்துவிட்டு மீண்டும் ஆழ்கடல் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த சமயம் அந்தப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளம் மீன்பிடித் தொழிலாளர்கள் அதனை அவதானித்திருந்தனர்.



கடற்கரையில் இருந்து ஆழ்கடல் பரப்பை நோக்கி வந்துகொண்டிருந்த இரண்டு பிரமாண்டமான டொல்பின்களையும் கண்டு பெரிய சுறாமீன்கள் வருவதாக எண்ணி அவற்றை கரைக்கு இழுத்து வந்தனர். அதன் பின்னர் வித்தியாசமான தோற்றத்தில் இவை இருந்ததால் அப்பகுதியில் வசிக்கும் முதியவர்களிடம் விடயத்தைக் கூறி அவர்கள் இவற்றின் தன்மையைப் புரிந்து கொண்டு நேற்றுக் காலை அவற்றைக் கடலில் விட்டனர். இறந்த டொன்பினில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களும் காணப்பட்டுள்ளன. (லோ,தீ,ச)

# இராணுவ புலனாய்வுப் பிரிவில் 7 அதிகாரிகளுக்கு பாதுகாப்பு இல்லை

(கொழும்பு)

இராணுவ புலனாய்வுப் பிரிவில் ஏழு முக்கிய அதிகாரிகள் பாதுகாப்பு பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளதாகவும், அதில் ஆறு பேர் மேஜர் தர அதிகாரிகள் எனவும், ஒருவர் கப்டன் எனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ புலனாய்வுப் பிரிவு முக்கியஸ்தர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்து இராணுவ தலைமைப்பீடத்திற்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் தெரியப்படுத்தியுள்ள போதிலும் அது குறித்து எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இராணுவம்...

காப்பையும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் அண்மையில் கோரியிருந்தது.

ஆனால் இதற்கு உரிய பதில் அளிக்காமல் இழுத்தடிப்புச் செய்வது என்ற பெயரில் எந்தக் கோரிக்கையையும் இராணுவம் ஏற்கவில்லை. நிராகரித்தே வந்தது.

இந்த நிலையிலேயே அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் இத்தகைய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இந்த கவலையை அரசுக்குத் தெரிவித்துள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஒல்ஸ்டெட்டிர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தினரின் இந்த அடாவடியான போக்கினால் நேற்று ஓமந்தை சோதனைச் சாவடியூடாக மட்டக்களப்பிற்குச் செல்ல இருந்த 30 உறுப்பினர்களைக் கொண்ட புலிகள் அணி தனது பயணத்தை இரத்துச் செய்துள்ளது.

இன்று மேற்கொள்ள இருந்த பயணத்தையும், விடுதலைப்புலிகள் இரத்து செய்து விட்டதாக புலிகள் தரப்பில் கூறப்படுகிறது.

இராணுவத்தின் இச் செயற்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்கும் அரசியல் அவதானிகள்,

யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டு வரும் ஆயுத மேந்தா போராளிகளுக்கு இரு தரப்பு நம்பிக்கையை உருவாக்கும் வகையில் உரிய போக்குவரத்து ஒழுங்குகளை இராணுவம் செய்து கொடுத்து வந்தது.

ஆனால் சிறிலங்கா இராணுவம் திடீரென இப்படியான முறுகல் நிலையை மேற்கொண்டால் தமிழீழ விடுதலைப்புலிகளால் என்னதான் செய்ய முடியும்?

அவர்கள் அறிவித்துள்ளது போல் சிறிலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ள பகுதியில் தமது அரசியல் போராளிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பாதுகாப்புடன் தான் அனுப்பி வைக்க நேரிடும். இதனால் யுத்த நிறுத்த ஒப்பந்தமே முறிவடையும் அபாயம் உள்ளது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

## தியாகி...

காலம் எம்மைத் துரோகியாகப் பார்க்க முன்னர் காலத்தின் தேவையை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார். கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் செம்பருத்தியும் இந்நிகழ்வில் உரையாற்றினார். (41,27)

## முன்னாள்...

சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஊர்காவற்துறை கரம்பன் பகுதியைச் சேர்ந்த பாஸ்கரன் பிறேமன் அசோக் (வயது-25) என்பவரே சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியிருக்கிறார்.

சடலத்தினருகே இருந்து கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசியொன்றில் தேவா எனும் பெயர் பொறிக்கப்பட்டிருந்ததாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே வேளை சம்பவ இடத்திற்கு நேரில் விஜயம் செய்த மல்லாகம் மாவட்ட நீதவான் திருமதி சரோஜினி இளங்கோவன் சடலத்தை அடையாளம் காண ஏதுவாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

(சு. 27,41,33)

## மட்டு.அரசியல்துறை....

இதனையடுத்து கண்காணிப்புக் குழுவினர் அங்கு வரவழைக்கப்பட்டனர். பொலிசார் சகிதம் கண்காணிப்புக் குழுவினர் அங்கு வந்ததையடுத்து இராணுவம் வெளியே நிற்க பொலிசாரினால் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

தமது அலுவலகம் மீது தொடரும் இத்தகைய சோதனை நடவடிக்கை குறித்து விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறை வன்மையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மாவட்ட துணை அரசியல் துறை பொறுப்பாளர் தயா மோகன் இது பற்றிக் கூறுகையில்; போராளிகள் அரசியல் வேலைத் திட்டங்களில் ஈடுபடுவதை தடுப்பதற்கான சதி முயற்சி இது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே கல்லாறு, வீரமுனை மற்றும் வாழைச்சேனை அலுவலகங்கள் மீதான இப்படியான சோதனைகள் நடைபெற்ற பின்பே தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரை அவமதிக்கும் வகையில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட வார்த்தைப் பிரயோகம் குறித்தும் தயா மோகன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## மட்டு...

லங்காப் பொலிசார் அப்பிரதேசத்தைச் சுற்றிவளைத்து தேடுதலையும் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

### பஞ்சிகாவத்தையில்

மருதானை பஞ்சிகாவத்தையில் நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் இனம்தெரியாதோரினால் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

சுட்டுக்கொல்லப்பட்டவர் 40 வயது மதிக்கத்தக்க மருதானையைச் சேர்ந்த ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். உந்துருளியில் வந்த இருவரே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை மருதானை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு மாவட்ட எல்லைப் புற பிரதேசமான ரிதிதென்னையில் நேற்று முன்தினம் இரவு கருணா குழுவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் மருதமேனன் இனம் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வாழைச்சேனையில் அமைந்துள்ள கருணா குழுவினரின் மறைவிடமொன்றிலிருந்து கருணாகுழுவைச் சேர்ந்த நான்கு பேர் பொலநறுவை நோக்கி பிக்கப் வாகனம் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த போது தேநீர் அருந்துவதற்காக வாகனத்தை நிறுத்தி தேநீர் அருந்திக் கொண்டிருந்த சமயம் அங்கே வந்த இருவர் மருதமேனன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றனர். அங்கு வந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் இவர்கள் மீது துப்பாக்கிச் பிரயோகம் செய்து விட்டு தப்பிச் சென்றுள்ளனர். (32)

இபபத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது